6-3-1952 M.Y.M BANGALORE, 2

போர்வாள்

வாள் 5 வீச்சு 27

5-4-52 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:

காஞ்சி. மணிமொழியார்

மா. இளஞ்செழியன் B.A.Hons

துணை ஆசிரியர் :

காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை அணா 2

சந்தேகம் வலுக்கிறது!

ஒரு மாகாணத்தின் கவர்னர் தான் அந்த மாகாணத்திலேயே மிக உயர்தரமான அதிகாரி.

மாகாண ஆட்சி, அவர் பெயரால்தான் நடத்தப்படுகிறது.

மாகாணத்தில் மந்திரி சபை இல்லாத போதும், மந்திரிசபை மாறுகிறபோதும், மாகாணத்தை நடத்திச் செல்லும் பொறுப்பு, அவரிடம் தான் இருக்கிறது.

மாகாணத்தில் பொதுத் தேர்தல் நடந்து முடிந்ததும், மெஜாரிட்டி கட்சியின் தலைவரை அழைத்துப் பேசி, மந்திரிசபை உருவாகும்படி பார்த்துக்கொள்ளும் பொறுப்பு அவரிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

புதிய அரசியல் திட்டப்படி, கவர்னர், தன் விருப்பப்படி கையாளக்கூடிய அதிகாரங்கள் என்று தனியாக எவையும் இல்லை என்றபோதிலும், கவர்னர்தான் ஒரு மாகாண சர்க்காரின் அடையாளச் சின்னமாகவும் நிர்வாகத் தலைவராகவும் இருந்து வருகிறார்.

மாகாண சர்க்காரின் அடையாளச் சின்னமாக கவர்னர் இருந்துவரும் காரணத்தால் அந்தப் பதவி கவுரவம் மிகுந்தது. அனைவராலும் மதிக்கப்படவேண்டியது.

இன்றைய தினம் ஒரு குறிப்பிட்ட கட்சியினர் மந்திரிசபை அமைக்கலாம், நாளைய தினம் வேறொரு கட்சியினர் மந்திரி சபை அமைக்கலாம்.

ஒரு கட்சி ஆளும் கட்சியாக இருக்கலாம். இன்னொரு கட்சி எதிர்ப்புக் கட்சியாக இருக்கலாம்.

ஆனால் கவர்னர் எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவானவர். எல்லாக் கட்சிகளாலும் மதிக்கப்பட வேண்டியவர். எல்லாக் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டவர். எந்த ஒரு கட்சியையும் சேரக்கூடாதவர். எந்த ஒரு குறிப்பிட்ட கட்சிக்கும் தனிப்பட்ட சலுகை எதுவும் காட்டக் கூடாதவர்.

ஏதாவது ஒரு கட்சியிடம் கவர்னருக்கு தனிப்பட்ட அக்கறை இருக்கிறது, அந்தக் கட்சியினருக்கு மட்டும் அவர் தனிப்பட்ட சில சலுகைகளைத் தருகிறார், அந்தக் கட்சிக்காரர்களுக்கு மட்டும் அவரால் அனுகூலம் இருக்கிறது என்கிற நிலை ஏற்பட்டுவிடுமானால், ஏனைய கட்சிக்காரர்கள், கவர்னருக்குப் போதுமான அளவு கவுரவம் காட்டமாட்டார்கள். என்ன இருந்தாலும் இந்த கவர்னர் ஒரு குறிப்பிட்ட கட்சியிடம் மட்டும்தானே பாசமும் நேசமும் வைத்திருக்கிறார் என்றெண்ணி, ஏனைய கட்சிக்காரர்கள், அவரிடம் ஒருவித அலட்சிய மனப்போக்குடனேயே நடந்து கொள்வார்கள். கவர்னர் பதவிக்கு இருக்கவேண்டிய மதிப்பும் கவுரவமும் மங்கிவிடும். நாட்டின் பொதுவாழ்விலேயே கூட ஒருவித களங்கம் ஏற்பட்டுவிடும்.

இந்தக் காரணத்தால்தான், எந்த ஒரு தனிப்பட்ட கட்சியைச் சார்ந்த எவரையும் கவர்னராக நியமிக்கக் கூடாது. கவர்னர் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் கட்சி அரசியலில் சிறிதளவும் பங்கெடுத்துக் கொள்ளாதவர்களாக இருக்கவேண்டும் என்று நாம் வலியுறுத்தி வருகிறோம்.

வடநாட்டைச் சேர்ந்த பிரபல காங்கிரஸ் தலைவராகிய ஸ்ரீ பிரகாசா அவர்கள் இந்த மாகாணத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டபோது, அவருடைய நிய

(4-ம் பக்கம் பார்க்க)

மீர்ஜாபருக்கு ஜே!

[பாண்டியன்]

"மீர்ஜாபருக்கு ஜே!"

"ஓமிசந்துக்கு ஜே!"

"பூர்ணையாவுக்கு ஜே!"

"ஜெயசந்திரனுக்கு ஜே!"

"பாதிரி கேபனுக்கு ஜே!"

"அந்தணர் மணி அய்யருக்கு ஜே!"

திடீரென்று என் வீட்டுப் படிக்கட்டுப் பக்கமிருந்து இந்த ஜே கோஷம் புறப்பட்டது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. எழுதிக்கொண்டேயிருந்த நான் பேனாவை அப்படியே வைத்துவிட்டு, படிக்கட்டுப் பக்கமாகப் போகலானேன்.

கோஷங்கள் மேலும் பல கேட்கலாயின.

"அக்பர் கானுக்கு ஜே!"

"மெனிடஸ்—அனிடசுக்கு ஜே!"

"யூதன் ஜூடாசுக்கு ஜே!"

"ஜூனியர் அமெரிக்கு ஜே!"

கோஷங்களைக் கேட்கக் கேட்க என் திகைப்பு அதிகமாகி விட்டது. ஆச்சரியமும் ஏற்பட்டுவிட்டது.

உலக வரலாற்றிலே யார் யார் மாபாவிகளாக இருந்திருக்கிறார்களோ, யார் யார் முதல்தரமான துரோகம்புரிந்திருக்கிறார்களோ, யார் யார் கடைந்தெடுத்த கயவர்களாக இருந்திருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் ஜே போடுகிறாரே யாரோ ஒருவர், இதென்ன விபரீதம் என்ற சிந்தனை என் உள்ளத்தைக் குடையலாயிற்று.

துரோகிகளுக்கெல்லாம் ஜே போடுகிறாரே—யார் அந்தத் தூயமணி என்பதைப் பார்த்தே தீரவேண்டும் என்கிற ஆவல் எனக்கு ஏற்பட்டு விட்டது. எனவே படிக்கட்டுகள் வழியாகத் தடதடவென்று கீழே இறங்கினேன்.

"புஷ்யமித்திர சுங்காவுக்கு ஜே!"

"வாசுதேவ கண்வாவுக்கு ஜே!"

"காட்டிக் கொடுத்த கண்ணியவான்களுக்கு ஜே!"

"துரோகம் புரிந்த தூயோர்களுக்கு ஜே!"

கோஷங்கள் மேலும் மேலும் கிளம்பின. கிளம்பியது மட்டுமல்ல ஆச்சரியம்! இந்த முறை, கோஷங்கள், வெகு அருகிலிருந்தே புறப்படலாயின.

படிக்கட்டுகளைவிட்டுக் கீழே இறங்கிப் பார்த்தேன். என் நண்பன் சேரன், புன்முறுவல் பூத்த முகத்துடனே, அங்கே நின்றுகொண்டிருந்தான். அவன் கையிலே நீண்டதோர் தடி! அந்தத் தடியின் உச்சியிலே ஒரு வெள்ளைக் கொடி! அந்தக் கொடியிலே சில கறுப்பு எழுத்துக்கள்! அவற்றைக் கூட்டிப் படித்தால், "முதல்தரமான துரோகம் புரிந்த மகத்தான மனிதர்களுக்கெல்லாம் ஜே!" என்ற வாசகம்!

நான் திடுக்கிட்டுப் போய்விட்டேன்!

"என்னப்பா சேரா இது, தடியும் கொடியும்! ஏன் இந்தக் கோலம்? எதற்காக இந்த வேஷம்? துரோகிகளுக்கெல்லாம் ஜே போடுகிறாயே என்ன அர்த்தம்? கையிலே துரோகக் கொடியை ஏந்தியிருக்கிறாயே, அது எதற்காக?" என்று வரிசை வரிசையாகக் கேள்விகள் பலவற்றை வீசினேன் நான்.

பதிலே பேசவில்லை சேரன். ஒரே ஒரு புன்னகையைத்தான் விடையாக அளித்தான்.

"உன் பேச்சோ விபரீதமாக இருக்கிறது. உன் செயலோ விசித்திரமாக இருக்கிறது. உன்னைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாகவும் இருக்கிறது. அதே நேரத்தில் கொஞ்சம் பயமாகவும் இருக்கிறது. என்னதான் நேரிட்டுவிட்டது உனக்கு? கொஞ்சம் வாயைத்தான் திறந்து பேசேன்" என்றேன் நான்.

."பயப்படுகிறாயா என்னைப் பார்த்து?"-கேட்டான் சேரன்.

"ஆமாம்!"—நான் தலையாட்டினேன்.

"ஏன் பயப்படுகிறாய்? ஒருவேளை, நம் நண்பன் சேரன் கீழ்ப்பாக்கம் போகவேண்டிய வேளை நெருங்கிவிட்டதோ என்று எண்ணிப் பயப்படுகிறாயா?"

"ஆமாம், சேரா, உன் சொல்லையும் செயலையும் பார்த்தபிறகு, அந்தப் பயம், உண்மையிலேயே எனக்குக் கொஞ்சம் ஏற்பட்டுத்தான் இருக்கிறது."

"அஞ்சற்க! பாண்டியா! அஞ்சற்க! எனக்குப் பைத்தியமுமில்லை—பைத்தியத்தைத் தீர்த்துக்கொள்வதற்காகக் கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டிய அவசியமுமில்லை!"

"பிறகு ஏனப்பா இந்தக் கோலம்?"

"ஓ! அதைக் கேட்கிறாயா? அப்படிக் கேள், சொல்கிறேன்! சாதாரண சிம்மாதனத்திற்கு ஆசைப்பட்டுக் கொண்டு, வெள்ளைக்கார வெறியன் கிளைவிடம்,

தன் நாட்டு மன்னன் சுராஜுத் தௌலாவைக் காட்டிக் கொடுத்தானே மீர்ஜாபர், அந்தச் சேனாதிபதி செய்த காரியம் முதல்தரமான துரோகம் என்றுதானே நீ கருதுகிறாய்?"

"ஆமாம்!"

"சில ஆயிரம் வெண்பொற்காசுகள் தனக்குக் கிடைக்கும் என்ற அற்ப ஆசைக்காக, துரோகச் செயலைப் புரியும்படி மீர்ஜாபரைத் தூண்டிவிட்டானே ஓமிசந்த், அந்தச் செயலை மகத்தான குற்றம் என்றுதானே நீ கூறுகிறாய்?"

"ஆமாம்!"

"பணத்தாலே கோட்டை கட்டி அந்தக் கோட்டைக்குள்ளே தன் உல்லாச வாழ்வை ஜொலிக்கச் செய்யவேண்டும் என்ற கெடுநினைப்புக் கொண்டு, மைசூர் மன்னர் திப்பு சுல்தானின் அரசாங்க இரகசியங்களையெல்லாம் வெள்ளைத் துரைகளுக்கு எடுத்துக் கூறி, மைசூர் ஆட்சியை வெள்ளையருக்கு அடகு வைத்தானே மைசூர் திவான் பூர்ணையா—அந்தப் பூசுரனின் புன்மைச் செயலைத் தூ தூ வெனக் காறி உமிழத்தானே நீ விரும்புகிறாய்?"

"தன் அருமை மகளின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டான் பிருதிவிராஜ் என்ற ஓரே காரணத்திற்காக, பிருதிவியும் தானும் ஓரே இனம் ஓரே நாடு என்பதை மறந்துவிட்டு, வேற்று நாட்டு மன்னன் மகமதுகோரியை, பிருதிவியின் மீது படையெடுக்கும்படி அழைத்தானே ஜெயச் சந்திரன்—அந்தத் துரோகி! வறுமைத் தேளால் கொட்டப்பட்டு வேதனைப் புயலில் சிக்கிச் சுழன்ற ஆயிரமாயிரம் ஏழைகளைப் பார்த்து, வாருங்கள் உங்களுக்கு வாழ்வளிக்கும்படி ஜார் மன்னனிடம் கூறுகிறேன் என்று அவர்களை ஓர் ஊர்வலமாக்கி மன்னன் மாளிகைக்கு அழைத்துச் சென்றுவிட்டு, உள்ளே சென்று, ஜார் மன்னனிடம், "வந்திருக்கிறார்கள் வறுமை வறுமை என்று கூவும் வீணர்கள்! சுட்டுத்தள்ளு அவர்களை!" என்று நச்சுச் சொல் கூறி மக்களைச் சுட்டு வீழ்த்தச் செய்தானே ரஷ்யப் பாதிரி கேபன்—அந்தத் துரோகி!! முதல் உலகப் போரின்போது, ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் பேராசையை எதிர்த்துப் போராடுகிறார்களே பிரிட்டிஷார்கள் என்ற நன்றியுணர்ச்சிகூட இல்லாமல், போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்த நேரத்தில், "ஜெர்மன் மன்னரே! இந்தியாவின் மீது படையெடுத்துவந்து இந்நாட்டைக் கைப்பற்றி வெள்ளையனை விரட்டுங்கள்" என்று ஜெர்மன் மன்னன் கெய்சருக்குக் கடிதம் தீட்டினாரே அந்தணர் தலைவர் காலஞ்சென்ற மணி அய்யர்—அந்தத் துரோகி!!! இப்படிப்பட்ட துரோகிகளின் தூர்ச்செயல்களை எண்ணிப் பார்க்கக்கூட நீ விரும்பமாட்டாய் அல்லவா?"

"ஆமாம் சேரா, ஆமாம்! எத்தனை முறை நான் உனக்கு ஆமாம் ஆமாம் என்று கூறுவது? மீர்ஜாபர், ஓமிசந்த், பூர்ணையா, ஜெயச்சந்திரன், கேபன், மணி அய்யர், இவர்களை மட்டுமா? பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகானை இரக்கமின்றி சுட்டுக்கொன்ற கயவன் அக்பர் கான், சிந்தனைச் சிற்பி சாக்ரடீசை வெறும் பொறாமை காரணமாக நஞ்சு அருந்திச் சாகும்படி செய்த சழக்கர்கள் மெலிடஸ்—அனீடஸ், தியாகத்தின் சின்னம் ஏசுநாதரை ஒரு சில வெண்பொற்காசுகளுக்காகக் காட்டிக் கொடுத்த கசடன் ஜூடாஸ், இரண்டாம் உலகப் போரின் போது தன் தாய் நாடு இங்கிலாந்தைத் தோற்கடிக்க ஜெர்மன் பேயன் ஹிட்லருக்கு உளவாளியாக இருந்த ஆங்கில நாட்டு பிரஜை ஜானியர் அமெரி, இவர்கள் எல்லோரையுமே நான் வெறுக்கத்தான் செய்கிறேன். இதில் என்னப்பா சந்தேகம் உனக்கு? ஏன் வருகிறது உனக்கு இப்படிப்பட்ட சந்தேகம்?"

"கோபித்துக் கொள்ளாதே பாண்டியா! கேட்கும்கேள்விக்கு மட்டும் விடைகூறு! மௌரிய குலத்துக் கடைசி மன்னனைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டு ஆட்சிப் பீடம் ஏறினானே அவனுடைய சேனாதிபதி புஷ்யமித்திரன், அவனைக் கூடவா நீ வெறுக்கிறாய்? சுங்க வம்சத்துக் கடைசி அரசனைச் சூழ்ச்சியால் தீர்த்துக் கட்டிவிட்டு "செங்கோல்" ஓச்சத் தொடங்கினானே அவனுடைய பிரதம மந்திரி வாசுதேவன் அவனையுமா உனக்குப் பிடிக்கவில்லை?"

"ஏன் சேரா! என்னை என்னவென்று எண்ணிக் கொண்டு இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கிறாய் நீ? துரோகிகளையெல்லாம் ஆதரிக்கக் கூடிய தூர்த்தன் என்று எண்ணிக் கொண்டாய் என்னை? அவ்வளவு மட்டரகமானவனா நான்? சீச்சீ! சேரா! உன்னை என் நண்பனாகக் கொண்டிருப்பதே தவறு என்று இப்போதுதான் எனக்குத் தெரிகிறது!"

"இரு இரு பாண்டியா—கோபித்துக் கொள்கிறாயே—அதுதானே கூடாது!"

"பிறகு, வேறென்ன செய்யச் சொல்கிறாய்? கட்டி அணைத்து முத்தமிடச் சொல்கிறாயா நீ கேட்கும் அற்புதக் கேள்விகட்கு?"

"பாண்டியா—நான் சொல்வதைக் கொஞ்சம் கவனமாகக்

(6-ம் பக்கம் பார்க்க)

1-ம் பக்கத் தொடர்ச்சி)

மனத்தை நாம் வன்மையாகக் கண்டித்ததற்கு இது ஒரு முக்கியமான காரணமாகும்.

காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ பிரகாசா இந்த மாகாணத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதைக் கேட்டவுடனே இந்த மாகாணத்தில் உள்ள காங்கிரஸ்வாதிகளுக்கு ஒருவித களிப்பும், காங்கிரசைச் சாராதவர்களுக்கு ஒருவகை சந்தேகமும் ஏற்படத்தான் செய்தன.

"என்ன இருந்தாலும் ஸ்ரீ பிரகாசா நம் கட்சிக்காரர் தானே — நமக்கென்று சில தனிச் சலுகைகளைக் காட்டாமலா போய்விடுவார்" என்று தேசியவாதிகள் எண்ணமிடலானார்கள். அதனாலே அவர்கள் உள்ளத்தில் களிப்பு கூத்தாடலாயிற்று.

"ஸ்ரீ பிரகாசா காங்கிரஸ்காரர். அந்தக் கட்சியின் முக்கியஸ்தர். எனவே ஏனைய கட்சிகளைவிட காங்கிரஸ் கட்சிக்குத்தான் அதிக சலுகைகள் காட்டுவார்" என்று ஏனைய கட்சிக்காரர்களெல்லாம் கருதலானார்கள். ஆகவேதான் அவர்கள் உள்ளத்தில், அவர் நடுநிலை உணர்ச்சியுடன் நடந்துகொள்வாரோ மாட்டாரோ என்ற சந்தேகம் நடமாடலாயிற்று.

அந்த சந்தேகம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகிறது.

இந்த மாகாணத்தில் ஸ்ரீ பிரகாசா கவர்னர் பதவியை ஏற்ற பிறகு நடந்துவரும் பல நிகழ்ச்சிகள் அந்த சந்தேகத்தை அதிகப்படுத்தும் தன்மை படைத்தனவாகவே இருந்து வருகின்றன.

எப்படியாவது இந்த மாகாணத்தில் ஒரு காங்கிரஸ் மந்திரி சபையை அமைத்துவிட காங்கிரஸ் மேலிடத்தார் செய்து வரும் முயற்சிகளுக்கு அனுகூலமாகவே நடந்துவருகிறார் ஸ்ரீ பிரகாசா என்று பிறர் எண்ணும் விதத்திலேயே காரியங்கள் நடந்து வருகின்றன.

சட்டசபையில் உள்ள பல்வேறு கட்சிகளில், எந்தக் கட்சி சட்டசபையின் மொத்த உறுப்பினர்களின் பாதிக்குமேற்பட்டவர்களின் நம்பிக்கையைப்பெற்றதாக இருக்கிறதோ அந்தக் கட்சிதான் மந்திரிசபை அமைக்கும் உரிமை பெற்றது என்பது ஜனநாயக நாடுகளில் உள்ள சம்பிரதாயம்.

சென்னை சட்டசபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 375இதில் பாதி 188.

எனவே, ஏதாவது ஒருகட்சி, 188 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கை உடைய உறுப்பினர்களின் நம்பிக்கையைப் பெற்றதாக இருந்தால் அந்தக் கட்சியின் தலைவரைத்தான் கவர்னர் கூப்பிட்டு மந்திரி சபை அமைக்கச் சொல்ல வேண்டும்.

ஆனால் இப்போது, சென்னை சட்டசபையில், எந்த ஒருகட்சியும் 188 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கை உடைய உறுப்பினர்களைப் பெற்றிராத காரணத்தால், இருக்கும் கட்சிகளுக்குள்ளே எந்தக் கட்சி, மிக அதிகமான உறுப்பினர்களைப் பெற்றிருக்கிறதோ அந்தக்கட்சியின் தலைவரைக் கூப்பிட்டுத்தான் கவர்னர் மந்திரிசபை அமைக்கச் சொல்ல முடியும்.

சென்னை சட்டசபையில் இப்போது இருக்கும் முக்கியமான சட்டசபைக் கட்சிகள் இரண்டு.

ஒன்று, காங்கிரஸ்—இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 152.

மற்றொன்று, ஐக்கிய ஜனநாயக முன்னணி இதன் உறுப்பினர்கள் தொகை 164.

ஐக்கிய ஜனநாயக முன்னணியே காங்கிரஸ் கட்சியை விட அதிக உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும் காரணத்தால், அதன் தலைவர் டி. பிரகாசம் அவர்களைத்தான் கவர்னர் மந்திரிசபை அமைக்கும்படி அழைப்பார் என்று அனைவரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் கவர்னரோ, ஐக்கிய ஜனநாயக முன்னணியைவிடக் குறைவான எண்ணிக்கை படைத்த காங்கிரஸ் கட்சித் தலைவர் தோழர் ஆச்சாரியாரை அழைத்து மந்திரிசபை அமைக்கும்படி தெரிவித்திருக்கிறார்.

எந்தக் காரணத்தை முன்னிட்டு கவர்னர் இப்படிச் செய்திருக்கிறார் என்பது நமக்குப் புலனாகவில்லை. நமக்குத் தெரிந்தவரை, கவர்னர் இப்படிச் செய்திருப்பதற்கு ஜனநாயக நீதியான காரணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

"ஐக்கிய ஜனநாயக முன்னணி என்பது ஒரு தனிக் கட்சியல்ல. கம்யூனிஸ்ட் கட்சி, பிரஜாகட்சி, உழைப்பாளிக் கட்சி, முற்போக்கு சுயேச்சைக்கட்சி முதலிய பல கட்சிகளின் கூட்டு அணி அது. தனித்தனிக் கட்சியாக வைத்துப் பார்க்கும்போது இந்தக் கட்சிகள் ஒவ்வொன்றும் காங்கிரஸ் கட்சியைவிட மிகவும் குறைந்த எண்ணிக்கை உடைய உறுப்பினர்களையே பெற்றிருக்கிறது. ஆகவேதான் கவர்னர் இந்தக் கட்சிகள் அனைத்தையும் விட்டுவிட்டு, இருக்கும் கட்சிகளுக்குள்ளே மிகப் பெரியது காங்கிரஸ் என்று கருதி, அதன் தலைவரை அழைத்திருக்கிறார் என்று" சிலர் கூறக் கூடும்.

சிந்தித்துப் பார்த்தால் இந்த வாதம் சிறிதும் பொருத்தமானதாகத் தெரியவில்லை.

சட்டசபையில் என்னென்ன கட்சிகள் இருக்கின்றன, அவற்

றிலே எந்தக் கட்சி பெரிய கட்சி என்பதைத்தான் கவர்னர் கவனிக்கவேண்டுமே தவிர, சட்டசபைக்கு வெளியே யார் யார் எந்தஎந்தக்கட்சியைச் சேர்ந்திருக்கிறார்கள் என்பதை அல்ல.

சட்டசபைக்கு உள்ளே சட்டசபை கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் சிலரும் சட்டசபை பிரஜா கட்சி என்ற பெயரில் சிலரும், சட்டசபை உழைப்பாளி கட்சி என்ற பெயரில் சிலரும், தனித்தனி சட்டசபைக் கட்சிகளாக, தனித்தனி கட்சித் தலைவர்களுடன், தனித்தனி அமைப்புகளாக இருந்திருந்தால் இந்த வாதம் பொருத்தமாக இருந்திருக்கும்.

ஆனால் இப்போது உள்ள நிலைமை அது அல்ல.

சட்டசபைக்கு உள்ளே கம்யூனிஸ்ட் கட்சி என்றோ, பிரஜா கட்சி என்றோ, உழைப்பாளிக் கட்சி என்றோ, தனித்தனிக் கட்சிகள் எதுவும் கிடையாது.

சட்டசபை ஐக்ய ஜனநாயக முன்னணி என்கிற ஒரே கட்சி தான் உண்டு.

அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் சட்டசபைக்கு உள்ளே, சட்டசபை விவகாரங்களைப் பொறுத்தவரை டி. பிரகாசம் ஒருவரையேதான் தங்கள் எல்லோருடையவும் தலைவராகக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தக் கட்சியின் உறுப்பினர்கள், சட்டசபை தவிர்த்த வேறு விவகாரங்களைப் பற்றிய பிரச்சினை வருகிறபோதும், சட்டசபைக்கு வெளியேயும், பொதுமக்கள் இடையிலேயும் வெவ்வேறு கட்சி லேபில்'களுடன் உலவலாம். ஆனால் சட்டசபையிலே அவர்கள் அத்தனைபேரும் ஒரே 'லேபில்' தான் உடையவர்கள். ஐக்ய ஜனநாயக முன்னணி என்பது தான் அந்த லேபில்.

கவர்னர் கவனிக்கவேண்டியது சட்டசபைக் கட்சிகளைத் தான். சட்ட சபைகளுக்கு வெளியே உள்ள கட்சிகளை அல்ல.

எனவேதான், இருக்கின்ற சட்டசபைக் கட்சிகளுக்குள்ளே மிகப் பெரிய கட்சி ஜனநாயக முன்னணி என்கிற காரணத்தால் அதன் தலைவரைத் தான் கவர்னர் அழைப்பார் என்று நாடு எதிர்பார்த்தது.

ஆனால் கவர்னர் சட்டசபை காங்கிரஸ் தலைவரையே அழைத்திருக்கிறார்.

கவர்னர் காங்கிரஸ்காரர்—அவருக்கு எப்படியாவது இந்த மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரிசபை அமைத்துவிடவேண்டும் என்கிற ஆசை இருப்பது இயல்பு—ஆகையால்தான் இப்படிப்பட்ட சம்பவம் உருவாகியிருக்கிறது என்று பொதுமக்களில் பலர் கருதுகிறார்கள்.

அந்தக் கருத்து தவறானதாக இருக்கலாம். ஆனால் அது தவறுதான் என்பதை நிலைநாட்டுவதற்குரிய ஆதாரம் எதையும் இதுவரை கவர்னரும் காட்டவில்லை. காங்கிரஸ்காரர்களும் காட்டவில்லை.

* * *

சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி, அன்பர் ஆச்சாரியாரைத் தன் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறது.

அப்படித் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு நாள் முன்னதாகவே, சென்னை கவர்னர், ஆச்சாரியாரை, மேல்சபைக்கு ஓர் உறுப்பினராக நியமனம் செய்திருக்கிறார்.

இவ்விதமாக ஆச்சாரியார் கவர்னரால் நியமனம் செய்யப்படாமல் இருந்திருந்தால், அவர், ஒன்று, கீழ் சபையில் உள்ள காங்கிரஸ் எம்.எல்.ஏ. யாராவது ஒருவரை ராஜினாமா செய்யச் சொல்லி, அந்த இடத்தில் ஒரு பொதுத் தேர்தலை நடத்தி, அந்தப் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று வந்திருக்க வேண்டும். இல்லையேல், மேல் சபை உறுப்பினர்களில் ஒருவரை ராஜினாமா செய்யச் சொல்லி, சட்டசபைத் தொகுதி—ஸ்தல ஸ்தாபனத் தொகுதி ஆகிய ஏதாவது ஒரு தொகுதியில் வெற்றிபெற்று வந்திருக்கவேண்டும்.

எம்.எல்.ஏ. ஒருவரை ராஜினாமா செய்யச்சொல்லி ஆச்சாரியார் அந்த எம்.எல்.ஏ.யின் தொகுதியில் பொதுத்தேர்தலுக்கு நின்றிருப்பாரானால் அவர் நிச்சயம் வெற்றிபெற்றிருப்பார் என்று சொல்ல முடியாது. இப்போது பொதுமக்களுக்குக் காங்கிரஸ் கட்சிமீதுள்ள ஆத்திரத்தில் ஆச்சாரியார் படுதோல்வி அடைந்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அதுபோலவே, மேல்சபைக்கு அவர் நின்றிருந்தாலும், சட்டசபைத் தொகுதி ஒன்றைத் தவிர வேறு எந்தத் தொகுதியிலும் அவர் நிச்சயம் வெற்றிபெற்றே தீருவார் என்று சொல்லமுடியாது.

ஏதாவது ஒரு தொகுதியிலே ஆச்சாரியார் நின்றிருந்து, தோற்றுப்போயிருப்பாரேயானால், காங்கிரஸ் கட்சிக்குப் பெருத்த அவமானமும் இழிவும் ஏற்பட்டிருக்கும்.

ஆனால் இப்போதோ கவர்னர், மேல்சபைக்கு ஆச்சாரியாரை நியமனம் செய்ததன் மூலமாக, இந்தப் பரிதாபகரமான நிலைமைகள் எதிலும் சிக்

(15-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்—துரோகிகளையும் தூர்த்தர்களையும் நீ அடியோடு வெறுக்கிறாய்—இது குற்றம்!"

"குற்றமா?"

"ஆமாம்! குற்றம்தான்! அதிலும் சாதாரண குற்றமல்ல! மகத்தான குற்றம்! மன்னிக்கமுடியாத குற்றம்?"

"என்ன சோரா உளறுகிறாய்? துரோகத்தை வெறுப்பதா மகத்தான குற்றம் என்கிறாய்?"

"ஆமாம் பாண்டியா! நிஜமாகத்தான் கூறுகிறேன்! துரோகத்தை வெறுப்பது மன்னிக்கமுடியாத குற்றம்தான்! அது குற்றமானால் எது சிறப்புள்ள செயல் என்று கேட்கிறாயா? தயக்கமின்றிக் கூறுவேன்! துரோகிகளைப் பாராட்டுவதுதான் பாராட்டப்படவேண்டிய செயல்! புரியவில்லையா உனக்கு! ஒரே ஒரு கேள்வி! அதற்கு மட்டும் பதில் கூறு! எல்லாம் புரிந்துவிடும்! இப்போது நடப்பது என்ன இராஜ்யம்?"

"இராமராஜ்யம்!"

"ஆட்சி புரிபவர்கள்?"

"காங்கிரஸ்காரர்கள்! ஆமாம்! அதனாலென்ன? காங்கிரஸ்காரர்கள் இராமராஜ்யம் நடத்துகிறார்கள் என்பதால், துரோகிகளைத்தான் பாராட்டவேண்டும் என்கிற ஏற்பாடு எப்படி ஏற்பட்டுவிடும்? எனக்குப் புரியவில்லையே சோரா! விஷயத்தைச் சற்று விளக்கமாகத்தான் கூறேன்?"

"கொஞ்சம் பொறு! கூறுகிறேன்! மகாத்மா காந்தி உலக உத்தமர் அல்லவா?"

"நிச்சயமாக!"

"அந்த சாந்த சொரூபியை ஈவு இரக்கமின்றி சுட்டுக் கொன்றானே நாதுராம் கோட்சே—அவன் மாபாதகன் அல்லவா?"

"சந்தேகமில்லாமல்!"

"கோட்சே செய்த காரியத்தை வெறுக்க வேண்டியது, கண்டித்துப் பேச வேண்டியது, அப்படிப்பட்ட செயல்புரிவது மனித குலத்தின் பண்பாட்டிற்கே பழுதுதரக் கூடியது என்பதை எடுத்துக்காட்ட வேண்டியது நல்லறிவாளர்கள் ஒவ்வொருவருடைய கடமை அல்லவா?"

"கட்டாயம்!"

"கோட்சே, குற்றமற்றவன்! மாசு இல்லாதவன்! தவறு எதுவும் புரியாதவன்! அவனுடைய செயல் நியாயமானது—கண்டிக்கப்படக் கூடாதது! என்றெல்லாம் யாராவது பேசினால் அப்படிப் பேசுபவரை என்ன பெயர் கூறி அழைக்கலாம்?"

"கசடர்கள், கயவர்கள், பாதகர்கள், மாபாவிகள், மனித உருவில் நடமாடும் விலங்குகள், நச்சுப் பாம்புகள், ஆணவத்தின் உருவங்கள், முட்டாள்தனத்தின் முழு வடிவங்கள்—என்ன பெயர் கூறினாலும் தகும் அந்த மூட மதியினருக்கு?"

"கோட்சேயின் காரியம் நியாயமானது என்று ஒருவர் வாயால் பேசுவதோடு இல்லாமல் புத்தகமாகவே எழுதிவிட்டால..........?"

"அந்தப் புத்தகத்தை, ஆட்சியாளர்கள், பறிமுதல் செய்துவிடவேண்டும். அதிலுள்ள நச்சுக் கருத்துக்களை நாட்டு மக்களிடம் கூறி, மக்களெல்லாம் அதை எள்ளி நகையாடும்படி செய்யவேண்டும். அந்தப் புத்தகத்தைத் தீட்டிய "சற்குணசீல"ரைச் சிறைச்சாலைக்குள் தள்ளியோ, அல்லது மக்கள் மன்றத்தின் முன் நிறுத்தியோ, மக்களெல்லாம் அந்த மகத்தான மனிதரைக் காறி உமிழும்படி செய்யவேண்டும்."

"நாடாள்பவர்கள் காங்கிரஸ்காரர்களாக இருந்துவிட்டால்....."

"ஒரு கணமும் தாமதியாமல் இந்தக் காரியத்தைச் செய்தாக வேண்டும்."

"அப்படிச் செய்யாமல், அந்தப் புத்தகத்தை வெளியிடுவதற்காக, ஆட்சியாளர்கள், அதன் ஆசிரியருக்கு **இரண்டாயிரம் ரூபாய் நன்கொடை** கொடுத்தால், அந்த ஆட்சியாளர்களைப்பற்றி என்ன வென்று கருதுவாய்?"

"என்ன வென்று கருதுவது! காந்தியடிகளைச் சுட்டுக் கொன்ற துரோகி கோட்சேயைவிட மோசமான துரோகிகள் இவர்களே என்று கருதுவேன். நாட்டு மக்களுக்கெல்லாம் இதை எடுத்துக்கூறுவேன். இந்த உண்மையை எடுத்துக் கூறுவதனால் எனக்கு எத்தகைய ஆபத்துக்கள் நேரிட்டாலும் அவற்றை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வேன். அது சரி சோரா! உனக்கு ஏன் இந்த சந்தேகங்களெல்லாம் தோன்றுகின்றன? உண்மையிலேயே அப்படி ஒரு புத்தகம் வெளிவரமுடியும் என்று நீ நம்புகிறாயா? அப்படியே வெளிவந்தாலும் அதை நம் ஆட்சியாளர்கள் இரண்டாயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்து ஆதரித்துப் பாராட்டுவார்கள் என்று நீ எண்ணுகிறாயா? காந்தியாரோ உலக உத்தமர் மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியின் அருமைத் தந்தை! நாட்டில் நடப்பதோ காங்கிரஸ் ஆட்சி! நாதுராம் கோட்சேயின் காரியமோ காந்தியடிகளைச் சுட்டுக் கொன்றது! இப்படிப்பட்ட மாபாதகத்தை ஆதரித்து ஒரு புத்தகம் வெளிவருவது—அதற்கு ஆட்சியாளர்கள் ரூபா இரண்டாயிரம் நன்கொடை கொடுப்பது—இதெல்லாம் என்ன நடக்கக்கூடிய காரியங்களா? இன்றைக்கு என்ன சோரா உன் பேச்சு இவ்வளவு விபரீதமாகிவிட்டது? பைத்தியம் முற்றுகிறதோ?"

"உண்மையை உரைப்பவனைப் பைத்தியக்காரன் என்று கூறி ஒதுக்கித் தள்ளுவதுதானே இந்த உலகத்தின் வாடிக்கை! இந்த உலகத்திலதானே நீயும் வாழ்கிறாய்! அப்படியிருக்க நீ மட்டும் இந்த விதிக்கு எப்படி விலக்காக இருந்துவிட முடியும்?"

"என்னதான் கூறுகிறாய் சோரா நீ?"

"உண்மையைத்தான் கூறுகிறேன். நாட்டிலே, நம் காலத்திலே, நடந்ததைத்தான் கூறுகிறேன். உண்மைக் குற்றவாளி காந்தியார்தானே தவிர, அவரைச் சுட்டுக்கொன்ற கோட்சே அல்ல என்று வெளிப்படையாகவும், தைரியமாகவும் துணிச்சலாகவும் எழுதியிருக்கிறார் ஒருவர் என்றுதான் கூறுகிறேன். உத்தரப் பிரதேஷ் மாகாணத்தில் வெளியிடப்பட்டுள்ள அந்தப் புத்தகத்திற்கு பீகார் மாகாண சர்க்கார் ரூபாய் இரண்டாயிரம் நன்கொடை கொடுத்திருக்கிறார்கள் என்றுதான் கூறுகிறேன். பீகார், உத்தரப் பிரதேஷ், இரண்டு மாகாணங்களிலும், ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் காங்கிரஸ்காரர்கள்தான் என்றபோதிலும், இன்றைய தினம் வரையிலே அந்தப் புத்தகத்தைத் தீட்டியவர்மீதோ வெளியிட்டவர்மீதோ, ஆட்சியாளர்கள் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றுதான் கூறுகிறேன்.

மனித சமுதாயத்திற்கே ஓர் ஒப்பற்ற வழிகாட்டியாக ஒளி வீசி வந்தார் தூய்மையின் வடிவமான காந்தியடிகள்—அந்த உத்தம புருஷரை மனம் துணிந்து சுட்டுக் கொன்றான் ஓர் கயவன்—அந்தக் கயவன் புரிந்த கொடுஞ் செயலை நியாயமான காரியம் என்று கூறி அந்தக் கசடனுக்கு ஜே போடுகிறது ஓர் ஏடு—அந்த ஆபாச ஏட்டை வெளியிட ரூபாய் இரண்டாயிரம் கொடுத்து உதவியிருக்கின்றனர் பீகார் காங்கிரஸ் மந்திரிகள்—ஆமாம்—துரோகி கோட்சேவுக்கு ஜே போட்டவனுக்கு ரூபாய் இரண்டாயிரம் தந்திருக்கிறது காங்கிரஸ் சர்க்கார்—ஒரு துரோகிக்கு ஜே போடுவது நியாயமான காரியம்தான் என்றால் ஏனைய துரோகிகளுக்கு ஜே போடுவதும் சர்க்காரால் பரிசளிக்கப்படக்கூடிய காரியங்கள்தானே — ஆகவேதான் நான் மீர்ஜாபருக்கு ஜே! ஓமிசந்துக்கு ஜே! பூர்ணையாவுக்கு ஜே! ஜூனியர் அமெரிக்கு ஜே! என்று உலக வரலாற்றில் உள்ள துரோகிகள் பெயரையெல்லாம் கூறி ஜே போடுகிறேன் அவசர அவசரமாக! என்னைப்போய்ப் பைத்தியக்காரன் என்கிறாய்! ஓடு ஓடு கீழ்ப்பாக்கத்திற்கு ஓடு என்று துரத்துகிறாய்! ஆனால் இப்படிப்பட்ட பைத்தியக்கார ஜே போடுபவருக்கு ரூபா 2000 நன்கொடை கொடுத்திருக்கிற இராம ராஜ்ய சர்க்காரையோ உச்சிமேல் வைத்து கொள்கிறாய், நீயே கூறு பாண்டியா, இப்போது கூறு, நானா பைத்தியக்காரன்?''

"மெய்தானா சேரா? நீ கூறுவதெல்லாம் உண்மைதானா? நிஜம் தானா பேசுகிறாய்?''

''என் சொல்லில் நம்பிக்கை பிறக்கவில்லையா உனக்கு! சரி, இதோ பார், இதைப் படித்த பிறகாவது உனக்கு நம்பிக்கை பிறக்கிறதா பார்ப்போம்'' என்று சொல்லிக்கொண்டே, சேரன், தன் சட்டைப் பையிலே கசக்கி மடக்கி வைத்திருந்த ஏடு ஒன்றை எடுத்து என் மேஜைமீது வைத்தான்.

பிரித்துப் பார்த்தேன்! பிளிட்ஸ்! பம்பாயிலிருந்து வெளிவரும் ஏடு! அகில இந்தியாவிலும் புகழ்ப்படும் பத்திரிகை! 29—3—52-ம் தேதியில் வெளியான இதழ்!

அதன் முதல் பக்கத்தைப் படித்தேன் அவசர அவசரமாக! திடுக்கிட்டுப் போய்விட்டேன்! சேரன் செப்பியது அவ்வளவும் எழுத்துக்கு எழுத்து, வார்த்தைக்கு வார்த்தை உண்மை! "பிளிட்ஸ்", மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் தந்திருக்கிறது பல தகவல்களை — வெறும் தகவல்களை அல்ல—திடுக்கிடச் செய்யும் தகவல்களை!

சுவாமி சத்யதேவர் என்பவர் வட இந்தியாவில் உள்ள ஒரு ஹிந்தி எழுத்தாளராம். வெறும் எழுத்தாளர்மட்டுமல்ல, ஒரு முக்கியமான பேச்சாளர்கூடவாம். அவர் ஹிந்தி மொழியில் பல புத்தகங்கள் எழுதியிருக்கிறாராம். நெடுங்காலத்திற்கு முன்பு, அவர் காங்கிரஸ் கட்சியின் பிரபல வீரர்களில் ஒருவராகக் காட்சி அளித்துக்கொண்டிருந்தாராம். ஆனால் பிற்காலத்தில் அவர் ஒரு தலைசிறந்த வகுப்புவாதியாக மாறி, சரிந்து வீழும் பழமைத் தூண்களைத் தூக்கி நிறுத்த முயலும் சத்தற்ற காரியங்களில் ஈடுபடலானாராம். சோவியத் ரஷ்யாவைப் பற்றியோ பொதுவுடமைத் தத்துவத்தைப்பற்றியோ யாராவது ஒரு வார்த்தை பாராட்டிப் பேசினாலும் அவர் கடுங்கோபம் கொள்வாராம். ஆனால் பெர்லின் வெறியன் ஹிட்லரையும், அவனுடைய படு நாசக் கொள்கையாகிய நாசிசத்தையும் பாராட்டிப் பாராட்டிப் பேசுவாராம். முற்போக்குக் கொள்கைகளையெல்லாம் வெறுத்து ஒதுக்கிவிட்டு, பத்தாம் பசலித் தத்துவங்களைக் கட்டி அணைத்துக்கொள்வதிலே அடங்காத ஆசை படைத்தவராம் அந்த சுவாமி சத்யானந்தா.

''சுவதந்த்ரா கி கோஜ் மென்!'' என்னும் பெயர் படைத்த ஓர் ஹிந்தி புத்தகத்தை எழுதியிருக்கிறாராம் இந்தப் பிற்போக்குப் பேரறிவாளர்! கவைக்குதவாத அந்தக் கருத்துக் குவியலை வெளியிடத்தான் ரூபாய் இரண்டாயிரம் நன்கொடை அளித்திருக்கிறார்களாம் பீகார் மாகாண சர்க்கார்.

ஒழித்துக் கட்டப்படவேண்டிய — ஆனால் — ஆட்சியாளர்களால் நன்கொடை அளித்து வெளியிடப்பட்டுள்ள அந்த உதவாக்கரை ஏட்டிலேதான், கோட்சே குற்றமற்றவன் என்கிற அபூர்வமான கருத்து அழுத்தம் திருத்தமாக வெளியிடப்பட்டிருக்கிறதாம். கூறுகிறது "பிளிட்ஸ்" ஆதாரபூர்வமாக!

சுவாமி சத்யதேவர் என்ன எழுதியிருக்கிறாராம் தெரியுமா? இதோ பாருங்கள் சத்யதேவ சுவாமிஜியின் சொர்ணபிம்பம்போன்ற வார்த்தைகளை:—

"Mahatma Gandhi must have committed some inexcusable mistakes on account of which an educated man like Godse came to Delhi from Poona to kill him. Godse had no personal quarrel with Mahatmaji...... Mahatmaji committed some very dangerous mistakes on account of Which he had to lose his life."

''மகாத்மா காந்தி, மன்னிக்க முடியாத சில குற்றங்களைப் புரிந்திருக்கவேண்டும். அவர் அப்படிச் செய்திருக்கிற காரணத்தால்தான் ஒரு கற்றறிந்த மனிதராகிய கோட்சே, பூனாவிலிருந்து டில்லி வரை பயணம் செய்துவந்து, காந்திஜியைக் கொன்றிருக்கிறார். மிக அபாயகரமான சில தவறுகளைச் செய்திருக்கிறார் மகாத்மாஜீ. ஆகவேதான் அவர் தன்னுடைய உயிரை இழக்கவேண்டி நேரிட்டது.''

சுவாமி சத்யதேவர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார் இந்தத் திருவாசகத்தை! மன்னிக்க முடியாத சில குற்றங்களைப் புரிந்துவிட்டாராம், காந்திஜி! ஆகவேதான் கோட்சே ஓடோடி வந்தாராம் அவரைச் சுட்டுக்கொல்ல! மகாத்மாஜி புரிந்திருப்பதாக இவர் கூறும் அந்த "மன்னிக்க முடியாத சில குற்றங்கள்"தான் யாவை? இதோ சுவாமிஜியே தன் திருப்பவளவாய் திறந்து உபதேசித்தருள்கிறார் கேளுங்கள்:—

"When Pakistan was established and lakhs of Hindus and Sikhs were driven out from the Punjab, when their ancestral property was forcibly taken over by Pakistan and the Hindus were given only clothes to cover their bodies and turned out by the Pakisthanis, the Hindu soul, very much wounded, began to cry. Was it not

(10-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

திராவிடர் வார இதழ்

சென்னை 5—4—52 சனிக்கிழமை

வந்துவிட்டார் ஆச்சாரியார்!

வந்துவிட்டார் ஆச்சாரியார்! சென்னை மாகாணப் பிரதமராக வந்துவிட்டார்!

வரமாட்டேன் வரமாட்டேன் வரமாட்டேன் என்று பதிகம் பாடிக்கொண்டேயிருந்தவர் திடீரென்று துண்டை உதறித் தோள் மேலே போட்டுக்கொண்டு ஓடோடி வந்துவிட்டார்!

அவர் தேர்தலுக்கு நிற்கவில்லை! பொதுமக்கள் முன் தோன்றவில்லை! மக்கள் மன்றத்தின் நல்லாதரவைக் கேட்கவுமில்லை! ஆனாலும் அவர் பிரதமராக வந்துவிட்டார்!

தேர்தலில் நின்று, மக்கள் மன்றத்தின் ஆதரவைப் பெற்று, வெற்றி வீரராக சட்ட சபைக்குள் நுழைந்து, அதன்பிறகு பிரதம மந்திரியாக வருவதுதான் முறை! அதுதான் ஜனநாயகம்! ஆனால் ஆச்சாரியாருக்கு ஜனநாயகத்தைப்பற்றி என்ன கவலை! அவர்தான் எதேச்சாதிகார காங்கிரஸின் முன்னோடும் பிள்ளையாயிற்றே! கவர்னருடைய நியமனமே கற்கண்டு—அது வேண்டாம் என்பவன்மேல் கற்குண்டு என்று சிந்து பாடிக்கொண்டே பிரதமர் நாற்காலியருகே வந்துவிட்டார்!

ஒருகாலம் இருந்தது! இதே ஆச்சாரியார், நியமன முறையைக் கண்டித்து காரசாரமாகப் பேசிய காலம்! அந்தக் காலத்தில், கவர்னர்கள், ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களில் இரண்டொருவரை சட்டசபைக்கு நியமனம் செய்துவிட்டால், அடே அப்பா, இந்தத் தேசபக்த சிங்கங்கள் எத்தனை முறை கர்ஜனை புரிந்தன! எவ்வளவு ஆக்ரோஷமாகச் சீறின! கேவலம் நியமனம் மூலமாக சட்டசபைக்குள் நுழைவது, இதைவிட வெட்கக்கேடு வேறு கிடையாதே என்று எவ்வளவு மாயாஜாலம் பேசினார்கள் இந்த மாவீரர்கள்! மக்கள் உள்ளத்தைக் கவர்ந்து ஓட்டுக்களைப் பெற்று 'உள்ளே' நுழைவதுதான் நியாயம், முறை, ஜனநாயகம்! அப்படியின்றி நியமனம் மூலம் நுழைவது ஆகுமா, தகுமா, நியாயமா என்று என்னென்ன தத்துவார்த்தம் பேசினார்கள் இந்த அசோக சக்ரதாரிகள்! ஆனால் இன்றோ, ஆச்சாரியார், அன்று இவர்களால் இவ்வளவு வன்மையாகக் கண்டிக்கப்பட்ட அதே நியமனமுறை மூலமாக, வெறும் மேல்சபை உறுப்பினராக மட்டுமல்ல, மந்திரியாக, வெறும் மந்திரியாக மட்டுமல்ல, பிரதம மந்திரியாக வருகிறார். கூடாது இந்த முறை என்று கூறினார்களா காங்கிரஸ்காரர்கள்? அன்று நாம் கண்டித்துப் பேசிய அதே முறையை இன்று ஆனந்தத்துடன் கையாள்வது ஆகாது கூடாது என்று மறுத்துப் பேசினார்களா? ஆச்சாரியாரே, இந்தப் போக்கு கூடாது என்று அவருக்காவது அறிவுறுத்தினார்களா? அறிவுறுத்தவில்லை. அறிவுறுத்தாதது மட்டுமல்ல, இந்த நியமனமுறை மூலமாக ஆச்சாரியார் பிரதமராகிறார் என்பதை ஒரு சிறிதும் எண்ணிப் பாராமல் ஆனந்தப் பள்ளு பாடுகிறார்கள்.

நியமன முறை என்பது எதேச்சாதிகார முறை, கூடாத திட்டம், தவறான பாதை, ஆகாத போக்கு, நாணயமுள்ள யாரும் தீண்டக் கூடாத தீய வழி—இவர்களேதான் சொன்னார்கள் அதுபோல! ஆனால் இப்போதோ, ஆச்சாரியார், நியமனமுறை மூலமாய் பிரதம மந்திரியாகிறார். இவர்களோ, வருக, ஆச்சாரியாரே வாழ்க, என்று வரவேற்புரையும் வாழ்த்துரையும் ஒருசேர வழங்குகிறார்கள்.

முன்னே, கூடாது கூடாது என்று கூக்குரல் எழுப்பினீர்களே, இப்போது அதே நியமன முறை மூலம் பிரதம மந்திரியை உருவாக்குகிறீர்களே, வெட்கமில்லையா என்று எதிர்க்கட்சிகள் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களைப் பார்த்துக் கைதட்டிக் கேலி செய்கிறார்கள். ஆனால் அந்த எம்.எல்.ஏ.க்களோ, அந்தக் 'கேலி'யைச் சிறிதும் பொருட்படுத்தாமல், ஆச்சாரியார் திருவடிகளே சரணம் என்கிற "பஜகோவிந்த"த்தைப் பாடுவதிலே மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

இதிலே ஆச்சரியம் என்ன இருக்கிறது? காங்கிரஸ் மந்திரிசபை ஒழிந்தே தீரவேண்டும் என்று பொதுமக்கள் திட்டவட்டமாக அளித்துள்ள அழுத்தந்திருத்தமான தீர்ப்பையே மீறி, மக்கள் விருப்பத்திற்கு நேர் மாறாக, மீண்டும் காங்கிரஸ் மந்திரிசபையை அமைக்கத் துணிந்திருக்கிறார்களே அவர்கள்! அப்படிப்பட்டவர்கள், தங்களால் முன்னே கண்டிக்கப்பட்ட நியமனமுறை மூலமாக இப்போது தங்கள் தலைவர் ஆச்சாரியார் பிரதமராகிறாரே என்பதைக் கண்டுதானா வெட்கப்படப்போகிறார்கள்!

மொத்த வாக்காளர்களிலே மூன்றில் இரண்டு பங்கு பேர், காங்கிரஸ் கட்சி அதிகாரம் வகிக்கக் கூடாது என்று தெள்ளத் தெளிய தெரிவித்துவிட்டார்கள்.

மொத்த சட்டசபைத் தொகுதிகள் 375-ல் 213 தொகுதிகளைச் சேர்ந்தவர்கள், காங்கிரஸ் ஆட்சி கூடவே கூடாது என்று தீர்ப்புக் கொடுத்துவிட்டார்கள்.

காங்கிரஸ் மந்திரிகள் ஆறு பேரையும், சில பிரபல காங்கிரஸ் தலைவர்களையும் படுதோல்வி அடையச் செய்ததன் மூலம், அழிந்தே தீரவேண்டும் காங்கிரஸ் ஆட்சி என்று தீர்த்துச் சொல்லிவிட்டது மக்கள் மன்றம்.

(16-ம் பக்கம் பார்க்க)

நடக்கிறது, நடக்கிறது, இராமராஜ்யம்!

எங்களுடைய கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சியாலும் இந்தியாவை இவ்வளவு திறமையாக ஆளமுடியாது என்று காங்கிரஸ் தலைவர் பிரதமர் நேரு அடிக்கடி பெருமையடித்துக் கொள்ளுகிறாரல்லவா, அந்தத் "திறமை"யின் இலட்சணம் எப்படிப்பட்டது என்பதை அறிய இந்த வாரம் ஓர் அருமையான உதாரணம் கிடைததருக்கிறது.

இந்திய சர்க்காருடைய பல்வேறு இலாக்காக்களிலே ஒன்று உள்நாட்டு இலாகா.

கலெக்டர், சப் கலெக்டர் முதலிய உயரிய உத்தியோகங்களுக்கு இநதியன் அட்மினிஸ்ட்ரேடிவ் சர்விஸ் என்று பெயர்.

அசிஸ்டென்ட் கமிஷனர், கமிஷனர் முதலிய உயரிய போலீஸ் பதவிகளுக்குஇந்தியன்போலீஸ் சர்வீஸ் என்று பெயர்.

இந்த இரண்டு சர்விஸ்களிலும் பதவி வகிப்பவாகளுக்குக் கொழுத்த ஊதியம் உண்டு.

இவர்களுக்குத் தரப்படும் பதவிகளும் மிகவும் பொறுப்பு வாய்ந்தவை.

இந்த இரண்டு சர்விஸ்களுக்கும் தேவையான உத்யோகஸ்தர்களை நியமிப்பது உள்நாட்டு இலாகாவின் வேலை.

இந்த வேலையைச் செய்வதற்காக, அந்த இலாகா, ஸ்பெஷல் ரிக்ரூட்மென்ட போர்டு என்பதாக ஒரு குழுவினரை ஏற்படுத்தியிருக்கிறது.

அந்தக் குழுவின் வேலை, இந்தியாவின் பல பகுதிகளிலும் சுற்றுப் பயணம் செய்து, இந்த உயர்தர உததியோகங்களுக்கு மனுப்போட்டிருப்பவர்களை நேரில் வரவழைத்து, அவர்களுடைய தகுதி திறமைகளை அறிந்துகொண்டு, தகுந்தவர்களைத்தேர்ந்தெடுத்து உள்நாட்டு இலாகாவுக்கு அறிவிப்பது.

அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கல்கத்தா முதலிய இடங்களுக்கு அழைத்துச்செல்லப்பட்டு, சிறிது காலம் பயிற்சி அளிக்கப்பட்டு, பிறகு, ஏதாவது ஓர் ஊரில தகுந்த உத்யோகத்தில் நியமிக்கப்படுவார்கள்.

இந்த விதமாக, இந்தியன் போலீஸ் செர்வீசுக்கு மனுப்போட்டவர்களின் தகுதி திறமைகளை அறிவதற்காக, ஸ்பெஷ்ல் ரிக்ரூட்வென்ட் போர்டு, கல்கத்தாவிற்கு வந்திருந்தபோது, பி.கே. முகாஜி என்ற ஒரே பெயரும் ஒரே முதலெழுத்தும் உடைய இரண்டுமனுதாராகளுக்குப் பேட்டி கொடுததார்கள்.

அவாகளிலே ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டாா. மற்றவர் தகுதியற்றவரென்று குறிப்புப் புததகத்தில் பொறிக்கப்பட்டு விட்டார்.

இந்திய போலீஸ் செர்விஸ்' இந்திய அட்மினிஸ்ட் ரேடிவ் செர்விஸ், இரண்டு சர்விஸ்களிலும், தேர்நதெடுக்கப்பட்ட மனுதாரருக்கு மட்டும்தான் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்படாதவர்களுக்கு எத்தகைய அறிவிப்பும் அனுப்பப்படுவது கிடையாது.

இரண்டு முகர்ஜிகளிலே ஒருவர் தேர்நதெடுக்கப்பட்டு, மறறவர் விடுபட்டுப் போனதும், உள்நாட்டு இலாகா, நியாயமாகச் செய்திருக்கவேண்டிய காரியம், தேர்ந தெடுக்கப்பட்ட முகர்ஜிககு, "நீர் தேர்ந்தெடுக்கப் பட்டுவிட்டீர்" என்ற அறிவிப்பு அனுப்பவேண்டியதுதானே!

ஆனால் நேரு சர்க்காரின் உள்நாட்டிலாகா என்ன அபாரமான காரியத்தைக் சாதித்திருக்கிறது தெரியுமோ?

எநத முகர்ஜி 'தேர்ந்தெடுக்கப்பட்டாரோ அவரை விட்டுவிடடு, எந்த முக்ர்ஜி தேர்ந்தெடுக்கப்படவில்லையோ அவருக்கு அன்பழைப்பு அனுப்பி விடடார்கள்.

தேர்ந்தெடுக்கப்படாத முகர்ஜி ஜாம் ஜாமென்று வந்தார். ஜோராகப் பயிற்சிக் காலத்தை முடித்தார். கல்கத்தா போலிஸ் இலாகாவில் அசிஸ்டென்ட் கமிஷனராக உத்யோகமும் பெற்றுவிட்டார்.

உண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட, ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படாத முகர்ஜி பல மாதங்கள் காத்துக் காத்துப் பார்த்தார். அறிவிப்பு எதுவும் கிடைக்கவில்லை. பல மாதங்களுக்குப் பிறகு, நான் தேர்ந்தெடுககப்பட்டதாகத் தினசரிகளில் அறிவிக்கப்பட்டுப் பல மாதங்களாகியும் இன்னமும் எனக்குப் பயிற்சி பெறுவதற்கான அழைப்பு வரவில்லையே, காரணம் என்ன என்று உள்நாட்டிலாகாவுக்குக் கடிதம் தீட்டிக் கேட்டார்.

கடிததைக் கண்டதும் தேள் கொட்டியது போலாகிவிட்டது உள்நாட்டிலாகாவுக்கு! அப்போததான், உண்மை, அவர்களுக்குப் புலப்படலாயிற்று!

தெரிந்து என்ன இலாபம்? தவறான முகர்ஜி பயிற்சிக் காலம் முடிந்து உத்யோகமும் பெற்றுவிட்டது. அவரை இனி என்ன செய்ய முடியும்? அவர்மேல்தான் என்ன தவறு? நீ. தேர்நதெடுக்கப் பட்டார்?

(15-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

Mahatmajis duty to listen to this cry? Whea Rs. 55 crores were given to Pakistan, the Hindu heart was shattered. Mahatmaji fasted to please the Muslims. Maulana Abul Kalam Azad made the Hindus to agree to the seven points and Gandhiji's fast was broken. The little patience which was left in the Hindus was also gone......This was the national insult which Godse embodied in himself and as a representative of insulted and pained Hindus he came out of Poona to kill Gandhi. If Maulana Azad had not compelled the Hindus to agree to the seven points, this assassination would not have taken place. Gandhiji hit the delicate Hindu heart and on account of this he had to give up his life. Therefore my decision is this:—Nathuram Godse was not at all to be blamed."

"பாகிஸ்தான் உருவாக்கப்பட்டு, இலட்சக் கணக்கான ஹிந்துக்களும் சீக்கியர்களும் பஞ்சாப் மாகாணத்தைவிட்டு விரட்டியடிக்கப்பட்டபோதும், அவர்களுடைய பிதிரார்ஜித சொத்துக்கள் வலுக்கட்டாயமாகப் பறிக்கப்பட்டு, உடலை மறைத்துக் கொள்வதற்குத் தேவையான துணிகள் மட்டும் கொடுக்கப்பட்டு அவர்களெல்லாம் பாகிஸ்தானைவிட்டு வெளியே துரத்தப்பட்டபோதும், படுகாயத்திற்கு உள்ளான ஹிந்து ஆத்மா, அவலக் குரலெழுப்பி அழத் தொடங்கிற்று, இந்த அழுகையைத் தீர்த்திருக்க வேண்டியது மகாத்மாஜியின் கடமை அல்லவா? 55 கோடி ரூபாய் பாகிஸ்தானுக்குக் கொடுக்கப்பட்டவுடனே ஹிந்து ஹிருதயம் தூள் தூளாகிவிட்டது. முஸ்லிம்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதற்காக மகாத்மாஜி உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினார். மகாத்மாஜியின் ஏழு திட்டங்களுக்கு ஹிந்துக்களை இணங்கும்படி செய்து மகாத்மாவின் உண்ணாவிரதத்தை நிறுத்தினார் மவுலானா அபுல்கலாம் ஆசாத். இந்தச் செய்கையால், ஹிந்துக்களிடம் எஞ்சியிருந்த சிறிதளவு பொறுமையும் மாயமாய் மறைந்துவிட்டது............மகாத்மாஜியின் இந்தத் தேசீய குற்றந்தான் நாதுராம் கோட்சேயாக உருவெடுத்தது. அவமரியாதைக்கும் படுகாயத்திற்கும் உள்ளான ஹிந்துக்களின் பிரதிநிதியாகப் பூனாவிலிருந்து புறப்பட்டு காந்திஜியைக் கொன்றார் கோட்சே. மகாத்மாவின் ஏழு திட்டங்களுக்கு ஒப்புக்கொள்ளும்படி இந்துக்களை மவுலானா ஆசாத் கட்டாயப்படுத்தாமல் இருந்திருந்தால், இந்தப் படுகொலை நடந்தேயிருக்காது. மிருதுவான தன்மை படைத்த ஹிந்து இருதயத்தின் மீது ஒரு தாக்குதலை நடத்திவிட்டார் காந்திஜி. இந்தக் காரணத்தால் தான் அவர் தன்னுடைய உயிரை இழக்க நேரிட்டது. ஆகையால் என்னுடைய முடிவு இதுதான்:—நாதுராம் கோட்சேமீது பழி சுமத்துவதற்கு எந்தவிதக் காரணமும் இல்லை."

கூறுகிறார் சுவாமிஜி தைரியமாக! நாதுராம் கோட்சே மீது பழிசுமத்த காரணமே இல்லையாம்! மகாத்மாஜி மன்னிக்கமுடியாத இரு தவறுகளைச் செய்துவிட்டாராம்! ஆகவேதான் அவர் மரணம் என்கிற தண்டனையை ஏற்கவேண்டி ஏற்பட்டு விட்டதாம்!

"குற்றம் புரிந்தவன் தண்டனையை அனுபவிக்கத்தானே வேண்டும்? மகத்தான குற்றம் புரிந்தார் காந்திஜி; ஆகவே மிகப் பெரிய தண்டனையை அனுபவித்தார்! நியாயம்தானே அது? இதற்காக கோட்சேயை ஏன் குற்றம் சொல்ல வேண்டும்?" என்று வெளிப்படையாகக் கேட்கிறார் சுவாமி சத்ய தேவர்! என்ன நெஞ்சழுத்தம்! எவ்வளவு ஆணவமான பேச்சு!

சட்டப்படியும் நியாயப்படியும் பாகிஸ்தானுக்குக் கொடுக்கப்பட வேண்டிய 55 கோடி ரூபாயைத் தாமதமின்றிக் கொடுத்துவிடுங்கள் என்று இந்திய சர்க்காருக்கு அறிவுரை கூறினாரே மகாத்மாஜி—இது ஒரு மன்னிக்கமுடியாத குற்றமாம்!

இந்துஸ்தான் பகுதியில் இந்துமத வெறியர்களும், பாகிஸ்தான் பகுதியில் முஸ்லிம் மத வெறியர்களும், மாற்று மதத்தவர்களை ஈவு இரக்கமின்றி வெட்டியும் குத்தியும் கற்பழித்தும் கொலைபுரிந்தும் கோரப் பேயாட்டம் ஆடினார்களே ஐந்தாண்டுகட்கு முன்பு, அந்த நேரத்தில், இரண்டு மதத்தைச் சேர்ந்த வெறியர்களிலே, எந்த மத வெறியர் பக்கமும் சேராமல்; நியாயத்தின் பக்கம் நின்று, நடுநிலைமையுடன் சிந்தித்து, வெறி எந்த மத மக்களிடமிருந்து புறப்பட்டாலும் சரி, அது தீதுதான் என்று அஞ்சா நெஞ்சுடன் அறிவுரை பகர்ந்தாரே காந்தியடிகள், அந்த நேரத்தில் அவர் கொண்டிருந்தாரே நடுநிலைப் போக்கு—அது, மன்னிக்கமுடியாத மற்றொரு குற்றமாம்!

இந்த இரண்டு குற்றங்களைப் புரிந்துவிட்டாராம் காந்திஜி! ஆகவே கோட்சே அவரைக் கொலை புரிந்தது நியாயம்தானாம்! கோட்சே, மாசு மரு இல்லாத மாணிக்கமாம்!

கோட்சே புரிந்த கொடுஞ்செயலை மனித சமுதாயத்திற்கு அவன் செய்த மகத்தான துரோகமென்று இந்திய மக்கள் கூறுகின்றனர். ஆசிய மக்கள் கூறுகின்றனர். ஆப்ரிக்க மக்கள் கூறுகின்றனர். ஐரோப்பிய மக்களும் அமெரிக்க மக்களும் ஆஸ்திரேலிய மக்களும் கூறுகின்றனர். உலகம் முழுவதுமே கூறுகிறது. வெறியன் கோட்சேயின் மூன்று குண்டுகளால் தாக்கப்பட்டு காந்தியடிகள் மறைந்தபோது மனித சமுதாயத்திலிருந்து பெருக்கெடுத்தோடிய கண்ணீர் வெள்ளத்தின் ஒவ்வொரு துளியும் முரசறைந்து கூறுகிறது கோட்சே செய்தது கொடுமை கொடுமை என்று. ஆனால் இதோ ஒரு மனிதர், ஒரு சுவாமி, ஒரு பிற்போக்கு உள்ளம், புத்தகம் தீட்டுகிறது கோட்சே குற்றம் அற்றவன் என்று. அந்தப் புத்தகம் வெளியிட ரூபாய் இரண்டாயிரம் நன்கொடை தந்திருக்கிறது பீகார் காங்கிரஸ் சர்க்கார்.

"இப்போது சொல்லு பாண்டியா! கோட்சேவுக்கு ஜே போட்டவருக்கு பீகார் காங்கிரஸ் சர்க்கார் ரூபாய் இரண்டாயிரம் நன்கொடை கொடுத்திருக்கிறபோது, நான், மீர்ஜாபருக்கும் ஓமிசந்துக்கும் யூதன் ஜூடாசுக்கும் திவான் பூர்ணையாவுக்கும் ஜே போட்டால் அது குற்றம் ஆகுமா?" என்று என்னைப் பார்த்துக் கேட்கிறான் சேரன்! என்ன பதில் கூறுவது நான்? என்ன பதில் கூறுவது?

தலைவர் பீடத்தில் "ராஜாஜி"!

"அடடே! நீயா தம்பி! வா, வா! எங்கே இவ்வளவு தூரம்...என்ன விசேஷம்?"

"தங்களிடம்தான் ஒரு காரியமாக வந்தேன்......"

"என்னிடமா? ஒரு காரியமா? என்ன அது?".

'ஒன்றுமில்லை. உள்ளூரிலே, அடுத்த ஞாயிற்றுக்கிழமை, ஒரு பொதுக் கூட்டம் போடலாம் என்று உத்தேசம்!"

"நல்ல யோசனை! தாராளமாகச் செய்யலாம்! கட்டாயம் போடுங்கள்! ஆமாம் அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?"

"நீங்கள்தான் அந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க வேண்டுமென்பது என்னுடைய ஆசை. தயவு செய்து நீங்கள்......"

"தம்பி! இதோ பார்! நானோ கிழவன்! வயதானவன்! கிழங்கட்டைகளின் பேச்சை இந்தக் காலத்தில் யாரப்பா எடுக்கிறார்கள்! வேறு யாரையாவது பார்த்துப் போடேன்!"

"இல்லை இல்லை! வயது முதிர்ந்தவர்களின் பேச்சிலேதான் முதிர்ந்த அனுபவத்தின் சாயல் படிந்திருக்கும். ஆகையால் நீங்கள்தான் கட்டாயம் தலைமைவகிக்கவேண்டும்."

"அனுபவம் இருக்கலாம். இல்லையென்று சொல்லவில்லை. வயது ஏற ஏற அனுபவமும் அதிகமாகிக் கொண்டுதானே போகும். ஆனால் நான் கூட்டத்திற்குத் தலைமைவகிப்பதற்கில்லையே! அடுத்த ஞாயிற்றுக்கிழமை நான் வெளியூருக்குப் போவதாக இருக்கிறேனே!......"

"சரி! உங்களுக்குச் சவுகரியமான வேறு தேதியைச் சொல்லுங்கள். அந்தத் தேதியில் கூட்டத்தை வைத்துக் கொள்ளுகிறோம்."

"எனக்குத் தொண்டை வேறு சரியாக இல்லை. மூன்று நாளாக இருமல். அதிகம் பேச முடியாது."

"வேண்டாம். இரண்டொரு வார்த்தை பேசினால் போதும்."

"ஆமாம்! என் பெயரைக் கேட்டாலே உங்கள் சங்கத்தில் சிலபேர் சீறி விழுவார்களே!"

"இல்லை இல்லை! அவர்களெல்லாம் கூட, இந்த முறை, நீங்கள் தான் கூட்டத்திற்குத் தலைமை வகித்தாக வேண்டுமென்று ஒரே பிடிவாதமாக இருக்கிறார்கள்."

"வேண்டாம் தம்பி! இந்த முறை மட்டும் வேறு யாரையாவது தலைவராகப் போட்டுக் கூட்டத்தை நடத்திவிடு. அடுத்த முறை நான் கட்டாயம் தலைமை வகிக்கிறேன்."

"அப்படிச் சொல்லக் கூடாது நீங்கள்! இந்த முறைதான் நீங்கள் கட்டாயம் தலைமை வகித்தாக வேண்டும். நீங்கள் தலைமை வகிக்கவில்லை என்றால் இந்தக் கூட்டத்திற்குச் சிறப்பே இருக்காது!"

"எனக்கோ ஒப்பவில்லை. நீயோ விடமாட்டேன் என்கிறாய். சரி தம்பி! நாளை காலைவா! யோசித்து முடிவு சொல்கிறேன்!"

"தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். சரி என்று ஒரு வார்த்தை சொல்லி விடுங்கள் போதும், ஒப்புக் கொள்ளுங்கள் சொல்கிறேன்."

"சரி! நீ இவ்வளவு தூரம் வற்புறுத்துகிறபோது நான் என்ன செய்வது? சொன்னாலும் கேட்கமாட்டேன் என்கிறாய். உன் விருப்பம்போல் செய். நினைவிருக்கட்டும். உனக்காகத்தான் இந்த முறை ஒப்புக் கொள்கிறேன்."

பொதுக்கூட்டம் போட விரும்புபவர்கள், பொதுக்கூட்டத்தில் பேசவேண்டிய பேச்சாளர்களையோ அல்லது தலைமைவகிக்க வேண்டியவர்களையோ சென்று வேண்டிக் கொள்ளும்போது, சிற்சில சமயம், மேலே குறிப்பிட்டுள்ளதைப் போன்ற உரையாடல்கள் நடப்பதுண்டு.

பேச்சாளர்களிலே இரண்டு வகையினர் உண்டு.

கூட்ட அமைப்பாளர்கள் போய்க்கேட்டவுடனே, தங்களுக்கு வர வசதியிருந்தால், சரி வருகிறேன் என்று உடனடியாக ஒப்புக் கொண்டுவிடுவார்கள். வசதி இல்லை என்றால் இல்லை என்று தெளிவாகச் சொல்லிவிடுவார்கள். இவர்கள், பேச்சாளர்களிலே ஒரு வகையினர். நேர்மையான வகையினர்.

பேச்சாளர்களிலே இன்னொரு சாரார் இருக்கின்றனர். கூட்டத்தில் போய்ப் பேசித்தானாகவேண்டும் என்கிற ஆசை இருக்கும் இவர்களுக்கு. அரைமணி நேர வேண்டுகோளுக்குப் பிறகு, கடைசியில், கூட்டத்திற்கு வர இசையவும் இசைவார்கள் இவர்கள். ஆனால் அதை, கூட்ட அமைப்பாளர்கள் கேட்டவுடனே, நேர்மையான முறையில் சொல்லிவிடமாட்டார்கள். வரமாட்டேன் வரமாட்டேன் என்றே நீண்ட நேரம்வரை சொல்லிக் கொண்டிருப்பார்கள். இல்லை இல்லை—நீங்கள் வந்துதானாகவேண்டும் என்று கூட்ட அமைப்பாளர்கள் ஒரு முறைக்குப் பலமுறை வேண்டி வேண்டிக் கேட்டபிறகு தான் தங்கள் ஒப்புதலைத் தெரிவிப்பார்கள். அப்படித் தெரிவித்தால் தான் தங்களுக்குக் கவுரவம் பெருகும், மதிப்பு உயரும், சிறப்பு அதிகமாகும் என்பது அவர்களுடைய எண்ணம்.

வெறும் பேச்சாளர்களிடத்திலே மட்டுமல்ல—அரசியல் தலைவர்களிடையே கூட இத்தகைய இரண்டு பிரிவுகள் உண்டு.

இந்த இருவகைப் பிரிவினரிலே, அன்பர் ஆச்சாரியார், இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்.

சென்னை சட்டசபையின் காங்கிரஸ் கட்சித் தலைவராக இருக்க அவர் இந்த வாரம் தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்திருக்கிறார்.

சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சிதான் மந்திரிசபை அமைக்கவேண்டும் என்கிற நிலைமை ஏற்படுமானால், அப்போது, சட்டசபை காங்கிரஸ் கட்சியின் தலைவர்தான் மாகாணத்தின் பிரதம மந்திரியாக வருவார். அது தான் அரசியல் சம்பிரதாயம்.

அப்படிப்பட்ட சிறப்பும் செல்வாக்குமுள்ள சட்டசபை காங்கிரஸ் தலைமைப் பதவியைத்தான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார் அன்பர் ஆச்சாரியார் இந்த வாரம்.

இந்தப் பதவி தனக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக, அன்பர் ஆச்சாரியார், சென்ற ஐந்தாண்டு

களாக, எண்ணற்ற முயற்சிகள் செய்து பார்த்து, ஒவ்வொரு முறையும் முழுத் தோல்வியை அடைந்திருக்கிறார்.

அடே அப்பா! இப்போது இவர் பெற்றிருக்கிற இந்த பதவியைப் பெறுவதற்காக, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால், இவர் பட்ட கஷ்டமகொஞ்சமா! அலைந்த அலைச்சல்தான் இலேசானதா!

ஊர் ஊராகச் சுற்றினார்—வட்டாரம் வட்டாரமாகப் பவனிவந்தார்—வலை வீசி வலை வீசிக் காங்கிரஸ் தளபதிகளைத் தன்பக்கம் இழுக்கப் பார்த்தார்—பொதுக்கூட்டம் போட்டார்—மாநாடு நடத்தினார்—ஊழியர்களைத் திரட்டிக்காட்டினார்.

அதுமட்டும்தானா?

உத்தமர் காந்தியடிகளிலிருந்து, "மனித குல மாணிக்கம்" ஜவகர்லாலிலிருந்து, எஃகு மனிதர் சர்தார் படேலிலிருந்து, ஒவ்வொருவரையும் தனக்கு ஆதரவாகப் பேசும்படி செய்து பார்த்தார்.

அந்த அளவோடாவது நின்றாரா? ஒவ்வொரு ஊரில் உள்ள காங்கிரஸ்காரர்களிடமிருந்தும் தனக்கு ஆதரவாகக் கையெழுத்துக்களை வாங்கிப்போட்டு "கல்கி" ஏடு முழுவதும் நிரப்பிக் காட்டினார்.

"கல்கி"யின் பேனா வாரவாரம் இவருக்காகவே நர்த்தனம் புரிந்தது. அந்தப் பத்திரிகையின் ஏடுகள் ஒவ்வொன்றிலேயும் இவருடைய திருப்புகழும் திருப்பல்லாண்டுமே திவ்யஜோதி வழங்கலாயின.

அக்ரகாரம் முழுவதுமே இவருடைய வெற்றிக்காகப் பாடுபட்டது. ஆரிய வட்டாரத்தின் ஆற்றல் அவ்வளவும் இவருடைய விருப்பம் நிறைவேறவேண்டும் என்பதற்காகச் செலவிடப்பட்டது.

என்றாலும் ஆச்சாரியார் தோற்றார். அவரைப் பிரதம மந்திரி பீடத்தருகே செல்லவிடமாட்டேன் என்று சூளுரை புகன்ற காமராஜர் வென்றார்.

அந்த நாள் முதல் ஆச்சாரியார் சென்னை மாகாண முதல் மந்திரியாக வருவதற்காக முயற்சி செய்யாத நாள் இந்த நாள் என்று கூறத்தக்க நாள் எந்த நாளும் கிடையாது.

சென்னை மாகாண அரசியல் உலகிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட அந்த நாளுக்குப் பிறகு, அவர், டில்லியிலே மந்திரியாக இருந்திருக்கிறார். வங்காளத்திற்குக் கவர்னராக இருந்திருக்கிறார். அகில இந்தியாவுக்கும் கவர்னர் ஜெனரலாக இருந்திருக்கிறார். மீண்டும் டில்லியிலே உள்நாட்டு அமைச்சராக இருந்திருக்கிறார். இவ்வளவு உயர்தரமான பதவிகளிலே கொலுவிற்றிருந்தபோதெல்லாங்கூட, அவருடைய உள்ளத்திலே திருப்தி இருந்தது கிடையாது. எப்படியாவது மீண்டும் சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராகவேண்டும், அதன்மூலம் சென்னை மாகாணப் பிரதமராக மீண்டும் கொலுவிற்றிருக்கவேண்டும் என்பதே அவருடைய அந்தரங்க ஆசை. அந்த ஆசை நிறைவேறாமல் இருக்கும்போது வேறு எந்த ஆசை நிறைவேறினால்தான் என்ன, வேறு எந்தப் பதவி கிடைத்தால்தான் என்ன, அவருக்கு மகிழ்ச்சியா ஏற்படும்? எனவேதான் அவர், அகில இந்திய கவர்னர் ஜெனரலாக ஒளி வீசிக்கொண்டிருந்த நேரத்திலேகூட அவருடைய மனம் அதிருப்திப் புயலில் சிக்கிய படகாகச்சுழன்றுகொண்டிருந்தது

சென்ற ஐந்தாண்டுகளாக அவருடைய உள்ளத்தை ஆட்டிப்

விற்பனையாகிறது!

திராவிடன் பதிப்பகத்தார் அளிக்கும் புதுமை நிறைந்த

1952-ம் வருட காலண்டர்!

திராவிடம் பெற்ற இலக்கியமேதை, சிந்தனைச் சிற்பி, நமக்கெல்லாம் கிடைத்த ஓர் ஒப்பற்ற வழிகாட்டி, நமது கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களும்

நமது கழகத்தின் இலட்சிய வீரர்களாகிய தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, சி. பி. சிற்றரசு, என். வி. நடராசன், ஈ. வி. கி. சம்பத், ஏ. கே. வேலன், தோழியர்கள் இராமாமிர்தம்மையார், சத்தியவாணிமுத்து முதலியவர்களுடைய அழகிய படங்களடங்கியதுமான ஒரே மூவர்ணக் காலண்டர்!

கண்ணுக்கு விருந்தூட்டும்படி சித்தரிக்கப்பட்டுள்ள வண்ணப் படங்களைக் கொண்டது!

கழகத்திற்கும் இல்லத்திற்கும், ஒளி வீசப் பிரகாசிப்பது!

குறைந்த விலை 0—8—0

வியாபாரிகட்குத் தக்க லாபமுடன் எங்கள் செலவிலேயே அனுப்பி வைக்கிறோம்.

மற்ற எல்லா விபரங்கட்கும் :—

திராவிடன் பதிப்பகம்

P. B. No. 18, வேலூர் N. A.

படைத்தவர்க்க ஆசை இப்போது நிறைவேறிவிட்டது. சென்னை சட்டசபையின் காங்கிரஸ் கட்சித் தலைமைப் பதவி தனக்குக் கிடைக்கவேண்டுமென்பதற்காக அவர் இந்த ஐந்தாண்டுக் காலமாக அரும் பெரும் முயற்சிகள் புரிந்துவந்தார். அந்த முயற்சிகள் இப்போது முழு வெற்றியைத் தந்துவிட்டன. அவருடைய மனவிருப்பம், முற்றிலும் நிறைவேறிவிட்டது.

தான் நெடுங்காலமாகத் தனக்குக் கிடைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்த பதவி உண்மையாகவே இப்போது தன் காலடியில் வந்து விழுந்துவிட்டது என்பதைக் காணக் காண, அன்பர் ஆச்சாரியாருக்கு அளவற்ற மகிழ்ச்சியும் எல்லையற்ற பூரிப்பும் ஏற்படுவது இயல்பு.

ஆனால் அந்த மகிழ்ச்சியையும் பூரிப்பையும் அவர் வெளியே காட்டிக்கொள்கிறாரா? இந்தப் பதவி தனக்குக் கிடைத்ததற்காகத் தான் மகிழ்ச்சி அடைவதாகவாவது அவர் சொல்லிக் கொள்கிறாரா? இந்தப் பதவி தனக்குக் கிடைக்க வேண்டுமென்பதற்காகத் தான் நெடுங்காலமாகத் 'தவம்' இருந்த உண்மையையாவது ஒப்புக்கொண்டிருக்கிறாரா நாணயமாக?

அதுதான் இல்லை.

இந்தப் பதவியிலே தனக்கு ஏதோ துளியளவும் விருப்பம் இல்லாதது போல நடிக்கிறார்.

தான் ஏதோ இந்தப் பதவியை விட்டு ஒதுங்கி ஒதுங்கி ஓட எண்ணுவதுபோலவும், மற்றவர்கள்தான் தன்னை வலுக்கட்டாயமாக இழுத்து வந்து இந்தப் பதவி நாற்காலியில் அமர்த்துவதுபோலவும் காட்டிக்கொள்ளுகிறார்.

வாழ்க்கையின் கடைசிக் காலத்தில் ஓய்வாக இருக்கலாமென்று எண்ணினேனே! கடைசியில் அந்த எண்ணத்தில் மண்விழச் செய்துவிட்டார்களே என்று மற்றவர்கள் மீது போலிக் கோபத்தையும் உண்டாக்கிக் காட்டுகிறார்.

உள்ளம் உரைக்கிறது இந்தப் பதவி கிடைத்ததற்காக மகிழ்ச்சி மகிழ்ச்சி என்று!

ஆனால் உதடுகள் உரைக்கின்றன இந்தப் பதவி எனக்கெதற்கு எனக்கெதற்கு என்று!

ஏனைய அரசியல் தலைவர்களாக இருந்தால், இந்தப் பதவி கிடைப்பதற்காகத் தாங்கள் முயற்சி செய்ததையும் மறைக்கமாட்டார்கள். முயற்சி வெற்றிபெற்றதும், அந்த வெற்றி காரணமாகத் தாங்கள் பெற்றுள்ள மகிழ்ச்சி உள்ளத்தையும் இல்லையென்று கூறமாட்டார்கள்.

ஆனால் ஆச்சாரியார் சாமான்ய அரசியல் தலைவரா? ஆரியவட்டாரத்தின் அகராதிப்படி கூறுவதானால் "அகில இந்தியாவிலேயே தனக்கு ஈடு இணையற்ற அறிவாளி" அல்லவா அவர்? ஆகவே தான் அவர், இந்தப் பதவி கிடைப்பதற்காகத் தான் செய்த முயற்சிகளையும் மறைக்கிறார். இந்தப் பதவி தனக்குக் கிட்டியுள்ள காரணத்தால் தான் பெற்றுள்ள ஆனந்தத்தையும் இல்லையென்று கூறுகிறார். அவர் கூறுவது மட்டுமல்ல, உண்மையிலேயே இந்தப் பதவி மீது அவருக்குத் துளியளவும் ஆசையில்லை—பிறருடைய வற்புறுத்தலுக்காகவே அவர் இணங்கியிருக்கிறார் என்று சில ஏமாளிகளை நம்பும்படியும் செய்திருக்கிறார்.

இதுதான் ஆச்சாரியாருக்கும் ஏனைய அரசியல் தலைவர்களுக்கும் உள்ள வேறுபாடு. இந்த வேறுபாட்டிலேதான் அவருடைய நீண்டகால அரசியல் பொதுவாழ்வின் இரகசியம் அடங்கியிருக்கிறது.

பதவிகளை அடைவதற்காகப் போராடவும் வேண்டும். அதே நேரத்தில் பதவிகள்மீது தனக்கு ஆசையே இல்லை என்று பிறர் நம்பும்படியும் நடந்துகொள்ள வேண்டும். இதுதான் ஆச்சாரியாரின் அரசியல் அகராதி.

இந்த அகராதியைத் துணையாகக்கொண்டு பார்த்தால்தான், அப்படிப் பார்ப்பவர்களுக்கு மட்டுந்தான், அவருடைய அரசியல் வாழ்வின் அந்தரங்கம் தெளிவாக விளங்கும்.

ஆச்சாரியாரைத் தவிர வேறு யாராவது இந்தப் பதவி பெற வேண்டுமென்பதற்காக இவ்வளவு முயற்சிகள் செய்திருந்தால் அந்த முயற்சிகள் பதவி வேட்டை என்ற பெயரால் கண்டிக்கப்பட்டிருக்கும். ஆனால் இப்போது முயற்சியும் செய்து வெற்றியும் பெற்றிருப்பவரோ ஆச்சாரியார்! ஆகவேதான், "தள்ளாத வயதையும் பொருட்படுத்தாது நாட்டுக்குச் சேவை செய்ய முன்வந்துள்ளாரே ராஜாஜி! என்ன தியாக உள்ளம்! என்ன நாட்டுப்பற்று!" என்ற பேச்சு காங்கிரஸ் வட்டாரத்திலே புறப்பட்டிருக்கிறது.

தன்னுடைய பதவி ஆசையை அவ்வளவு திறமையாக மூடி மறைத்து, அந்தப் பதவி ஆசைக்குத் தியாக சின்னம் என்ற லேபிலை ஒட்டிக் காட்டியிருக்கிறார் ஆச்சாரியார்.

வேறு தலைவர்களாக இருந்திருந்தால், நீங்கள்தான் கட்சித் தலைவராக இருக்கவேண்டுமென்று திருவாளர்கள் குமாரசாமி ராஜாவும் சஞ்சீவி ரெட்டியும் காமராஜ நாடாரும் ஒரு மாதத்திற்கு முன்பு சென்று கேட்டபோதே ஒப்புக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் ஆச்சாரியார் அசகாய சூரராயிற்றே! அவ்வளவு எளிதில் ஒப்புக்கொண்டுவிடுவாரா! கேட்டவுடனே ஒப்புக்கொண்டால், விஷயம், சப்பென்று போய்விடாதா? என்ன இருந்தாலும் ஆச்சாரியாருக்கு இன்னமும் பதவி ஆசை போகவில்லை என்று நாடு கூறி

தில்லை-வில்லாளன்
தீட்டியது
சரித்திர அடிப்படையில்
எழுந்த கற்பனைக் கோட்டை.
விலை ரூ. 2—0—0
திராவிடன் பதிப்பகம்
P. B. No. 18, வேலூர் N.A.

விடாதா? "என்னய்யா அக்ரமம் இது! கவர்னர் ஜெனரல் என்கிற மிக உயர்ந்த பதவியில் இருந்தவர் சாதாரண முதலமைச்சர் என்கிற சாதாரண பதவிக்கா ஆசைப்படுவது" என்று பல காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் குறை சொல்லி விடமாட்டார்களா? ஆகவேதான் அவர், சென்ற ஒரு மாத காலமாக வேண்டாம் வேண்டாம் என்று சொல்லிக்கொண்டிருந்துவிட்டு, கடைசியில், இப்போது ஒப்புக் கொண்டிருக்கிறார்.

கேட்டவுடனே ஒப்புக்கொள்ளாமல், இப்படி நீண்டகால தவணைக்குப் பிறகு ஒப்புக்கொண்டிருப்பதாலே ஆச்சாரியாருக்குப் பல விதத்திலே "இலாபம்"!

"ஐயோ பாவம்! தள்ளாத மனிதர்! முதிர்ந்த வயது! அவர் ஏதோ பஜகோவிந்தம் பாடிக்கொண்டு, இராமாயணம் படித்துக்கொண்டு, காலத்தை ஓய்வாகக் கழிக்கலாம் என்று எண்ணினார் — அவரைப் போய் இப்படி ஓயாமல் தொல்லை கொடுத்து, கட்சித் தலைவராக ஆக்கிவிட்டார்களே!" — இப்படி ஒரு உரையாடல் இப்போது நாட்டிலே பரவுகிறது. பிறருடைய கட்டாயத்துக்காகத்தான் அவர் இந்தப் பதவியை ஒப்புக்கொண்டிருக்கிறாரே தவிர சொந்தத்தில் அவருக்கு இந்தப் பதவிமீது துளியும் ஆசையில்லை என்ற ஓர் தவறான எண்ணம் இப்போது பலர் இடையிலேயும் ஏற்பட்டிருக்கிறது.

உடனே பதவியை ஒப்புக்கொள்ளாததால் ஆச்சாரியாருக்குக் கிடைத்துள்ள முதல் "இலாபம்" இது!

"கட்சிக்குள்ளே என்னை யாரும் எதிர்த்துப் பேசக்கூடாது. அது எப்படி—இது எதற்கு—இவர் ஏன்—அவர் கூடாது என்றெல்லாம் கூறக்கூடாது. நான் சொன்னதைச் சொன்னபடி கேட்டு அதன்படி நடந்துகொள்ளவேண்டும். நீங்கள் அப்படிச் செய்வதாக இருந்தால்தான் நான் இந்தப் பதவியில் இருப்பேன். இல்லாவிட்டால் இப்போதே ராஜிநாமா செய்துவிடுவேன்" என்று காங்கிரஸ் எம். எல். ஏ.க்களை யெல்லாம், இப்போது, ஆச்சாரியார், தன் மனம்போனபடி அடக்கி ஆள முடியும். அவருடைய எந்தத் தவறை எதிர்த்து எந்தக் காங்கிரஸ் எம். எல். ஏ. கட்சிக் கூட்டத்திற்குள் போராட்டம் நடத்தினாலும், "வேண்டாம் வேண்டாம் என்று கூறியவனை வலுக்கட்டாயமாக இழுத்துவந்து உட்கார வைத்துவிட்டு, இப்போது இப்படி உயிரை வாங்குகிறீர்களே, தகுமா?" என்று அவர் ஒரு வார்த்தை கூறினால்போதும். அந்த எம். எல். ஏ. பெட்டிப் பாம்பாக அடங்கித்தான் ஆகவேண்டும்.

உடனடியாக சம்மதத்தை அறிவிக்காததால் ஆச்சாரியாருக்குக் கிடைத்துள்ள இரண்டாவது இலாபம் இது.

"இன்றைக்குக் காமராஜர் ராஜாஜியைச் சந்தித்துப் பேசினார். ராஜாஜி தன் உடல் நலமின்மை காரணமாகக் கட்சித் தலைவர் பதவியை ஏற்க முடியாதென்று கூறி விட்டார்."

"நேற்று மாலை ஏழு மணி அளவில், பிரதமர் குமாரசாமி ராஜா ஒரு மணி நேரத்திற்குமேல் ராஜாஜியை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கும் ராஜாஜி முடியாது என்று கூறிவிட்டதாகவே தெரிகிறது."

"ராஜாஜி ஒருவரால்தான் இன்றைய நெருக்கடியான நிலையில் காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்து காங்கிரஸ் கட்சியைத் திறமையான முறையில் நடத்திச் செல்ல முடியும் என்று காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் பலர் கருதுகின்றனர். எப்படியாவது அவரைச் சம்மதிக்கும்படி செய்யவேண்டும் என்று வேறு சிலர் கூறுகின்றனர்."

"ராஜாஜி இணங்குவாரா மாட்டாரா என்பது இன்னமும் வெளிவாகத் தெரியவில்லை. அநேகமாக அவர் இணங்கமாட்டார் என்றே தெரிகிறது."

"சட்டசபை காங்கிரஸ் கட்சியிலிருந்து ஒன்பது பேர் கொண்ட தூதுகோஷ்டி ஒன்று ராஜாஜியைக் கண்டு பேசி அவர் சம்மதத்தைப் பெறுவதற்காக இன்று புறப்பட்டிருக்கிறது."

இந்தவிதமான செய்திகள் சென்ற ஒரு மாத காலமாகத் தினம் தினம் பத்திரிகைகளிலே வந்தபடி இருக்கின்றன. மற்ற எல்லாப் பிரச்சினைகளையும்விட "ராஜாஜி பிரச்சினை"யே எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்ததாகவேண்டிய அளவுக்குத் தினசரி ஏடுகளிலே தினம்தினம் இந்தப் பிரச்சினை பற்றி ஏதாவது ஒரு செய்தி வந்தபடி இருந்திருக்கிறது.

உடனடியாக சம்மதத்தைத் தெரிவிக்காததால் ஆச்சாரியாருக்குக் கிடைத்துள்ள மூன்றாவது இலாபம் இந்த அமோகமான விளம்பரம்!

ஒருவேளை ஏதாவது திடீர் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டு ஆச்சாரியாரைத் தவிர வேறு யாரையாவது தலைவராகத் தேர்ந்தெடுத்து விட காங்கிரஸ் கட்சி முடிவு செய்துவிட்டது என்று வைத்துக்கொள்வோம். அப்போது, "ஆச்சாரியாருக்கு என்ன இந்தப்பதவிமீது ஆசையா? அவர்தான் வேண்டாம் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருந்தாரே! அவர் மட்டும் வேண்டும் என் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் போதாதா! இந்தப் பதவி நிச்சயம் அவருக்குத்தானே கிடைத்திருக்கும்" என்று அவருடைய பக்தகோடிகள் ஒரு புது 'பஜகோவிந்தம்' பாடி, அவருடைய பெயருக்கு அவமானம் ஏற்படாதபடி பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

ஆச்சாரியார் உடனடியாகச் சம்மதம் தராதற்கு இது மற்றொரு காரணம்.

ஆச்சாரியாரிடத்திலே வேறு எந்தத் திறமை இருக்கிறதோ, இல்லையோ, அது நமக்குத் தெரியாது. ஆனால் சூழ்ச்சி என்பது ஒரு திறமையானால், அந்தத் திறமை அவரிடத்திலே ஏராளமாக இருக்கிறது என்பதைத்தான் கட்சித் தலைவர் பதவியை ஒப்புக்கொள்ளும் பிரச்சினையிலே ஆச்சாரியார் நடந்து கொண்டிருக்கிற முறை நமக்கு நன்கெடுத்துக்காட்டுகிறது.

"போர்வாள்"

சந்தா விவரம்

ஓராண்டு	ரூ. 6 8 0
6 மாதம்	ரூ. 3 4 0

போர்வாள் அலுவலகம்

பவழக்காரத் தெரு,
சென்னை 1.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

...க்கொள்ளாதபடி, காங்கிரஸ் கட்சிக்குப் பாதுகாப்பு அளித்து விட்டிருக்கிறார்.

ஆச்சாரியாரைத் தவிர ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியாரையுங்கூட மேல்சபைக்கு நியமனம் செய்திருக்கிறார் கவர்னர்

இந்த இரண்டு நியமனங்களின் காரணமாக மேல்சபையில் காங்கிரஸ் கட்சியின் பலம் இரண்டு எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது.

காங்கிரஸ் கட்சியைத் தவிர வேறு கட்சிக்காரர் எவரையும் கவர்னர் இதுபோல மேல்சபைக்கு நியமனம் செய்யவில்லை [மகமது உஸ்மான், பாஷ்யம் அய்யங்கார் ஆகிய இரண்டு சுயேச்சை உறுப்பினர்களைத்தான் நியமனம் செய்திருக்கிறார்].

கவர்னரின் இந்தச் செயலால் காங்கிரஸ் கட்சிக்கு அனுகூலமும், ஏனைய கட்சிகளுக்குப் பிரதிகூலமும் ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

* * *

மேல்சபைக்கு ஒரு சிலரை நியமனம் செய்யும் உரிமையை புதிய அரசியல் திட்டம், கவர்னர்களுக்கு வழங்கியிருக்கிறது என்பது உண்மைதான்.

அரசியல் கட்சிக்காரர்களைச் சட்டசபைக்குள் நுழைப்பதற்காக அல்ல இந்தப்பிரிவு ஏற்பட்டிருப்பது. விஞ்ஞானம், இலக்கியம், கலை முதலிய துறைகளில் ஆழ்ந்து பணியாற்றும் பேரறிஞர்கள், தேர்தல் காரியத்தில் ஈடுபட்டு வெற்றிபெற நேரமில்லாத காரணத்தாலோ, அல்லது அரசியல் கட்சிகளின் போட்டா போட்டிச் சிக்கல்களில் நுழைய விருப்பமில்லாததாலோ, சட்டசபைகளைவிட்டு ஒதுங்கியிருப்பார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்களின் அறிவுரையும் ஒத்துழைப்பும் நாட்டுக்கு மிகவும் தேவையானதாக இருக்கக்கூடும் அப்படிப்பட்ட அறிஞர்களை சட்டசபையின் உறுப்பினர்களாக ஆக்குவதற்காகத்தான் இந்த நியமனமுறை வகுக்கப்பட்டிருக்கிறது.

சர் சி. வி. ராமன் போன்ற விஞ்ஞானிகள், டாக்டர் மு. வரதராசன் போன்ற தமிழ் அறிஞர்கள், டாக்டர் குருசாமி முதலியார் போன்ற மருத்துவ வல்லுநர்கள், தண்டபாணி தேசிகர் போன்ற கலைவாணர்கள் இப்படிப்பட்டவர்களின் அறிவும் அனுபவமும் நாட்டுக்கு நிச்சயம் தேவை. ஆனால் அவர்களாக ஒரு நாளும் தேர்தலுக்கு நின்று பிறருடன் போட்டியிட்டு சட்டசபைக்குள் நுழைவதை விரும்பமாட்டார்கள். அத்தகையவர்களை, கவர்னர், மேல்சபை உறுப்பினர்களாக நியமிப்பதன் மூலம் அவர்களுடைய அறிவு ஆற்றல்களை நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். இதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள முறைதான் கவர்னரின் நியமன உரிமை.

குறிப்பிட்டுள்ள துறைகளில் உள்ள தலைசிறந்த அறிஞர்களைச் சட்டசபைக்குள் அழைப்பதற்காக வென்று வகுக்கப்பட்டுள்ள ஒரு முறையை தேர்தல் மூலம் சட்டசபைக்குள் நுழையக்கூடிய அரசியல் வாதிகளுக்காகப் பயன்படுத்தியிருக்கிறார் கவர்னர். அதிலும் காங்கிரஸ் கட்சியிலிருந்து மட்டும் இரண்டு பேரை நியமனம் செய்திருக்கிறாரே தவிர பிரஜா கட்சியிலிருந்தோ கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தோ சோஷலிஸ்ட் கட்சியிலிருந்தோ ஒருவரைக் கூட நியமனம் செய்யவில்லை.

* * *

காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ பிரகாசா இந்த மாகாணக் கவர்னராக நியமிக்கப்பட்டபோது, காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் விசேஷ சலுகைகளைக் காட்டிவிட்டு, பிற கட்சிகளையெல்லாம் அவர் புறக்கணித்து விடுவாரோ என்ற ஒரு வித சந்தேகம் நாட்டு மக்கள் உள்ளத்திலே தோன்றலாயிற்று.

இந்த சந்தேகத்தை மேலும் மேலும் வளர்க்கும் தன்மை படைத்தனவாயிருக்கின்றன நாம் மேலே குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சிகள்.

இந்த சந்தேகத்தை வளரவிடக்கூடாது கவர்னர். வளரவிடுவது கவர்னர் பதவிக்கு இருக்கவேண்டிய கவுரவத்தையும் சிறப்பையும் சிதைத்துவிடும் என்பது நம் கருத்து.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று அறிவிப்பு வந்தது, அந்த அறிவிப்புக்கு இணங்க அவர் வந்து பயிற்சி பெற்று, உத்யோகமும் பெற்றுக்கொண்டார். அது அவர் தவறு?

தவறான முகர்ஜியை உத்யோகத்திலிருந்து தள்ளவும் முடியாது—அதே நேரத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட முகர்ஜிக்கு உத்யோகம் இல்லை என்று சொல்லவும் முடியாது. விஷயம் வெளியே தெரிந்தாலோ உள்நாட்டிலாகாவின் மானம் போய்விடும். என்ன செய்வது என்று சிந்தித்துப் பார்த்தார்கள் உள்நாட்டிலாகாவினர். விஷயம் வெளியே தெரியாமல் இருக்கவேண்டுமானால் பயிற்சி எதுவுமின்றி உடனே இந்த முகர்ஜிக்கும் வேலை கொடுத்துவிடுவது தான் உத்தமம் என்று அவர்களுக்குப் பட்டது. உடனே இவரை விந்தியப்பிரதேசத்தில் அசிஸ்டெண்ட் சூபரின்டெண்டாகப் போட்டுவிட்டார்கள்.

எப்படியிருக்கிறது வேடிக்கை? இப்படிப்பட்ட கோமாளிக்கூத்துகளைப் புரிந்துவருகின்ற ஆட்சிக்குப் பெயர்தான் திறமையுள்ள ஆட்சியாம்! கூறுகிறார் நேரு! நம்புகிறீர்களா நீங்கள்!

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றாலும் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் மந்திரிசபை அமைக்கிறார்கள்!

மக்கள் அளித்துள்ள மகத்தான தீர்ப்பைப்பற்றி அணுவளவும் கவலையின்றி மந்திரிசபை அமைக்கிறார்கள்!

சட்டசபையிலே பாதி அளவு ஸ்தானங்களைக் கூட பெருமலிருந்தும், பொதுமக்களாலே ஓட ஓட விரட்டப்பட்டிருந்தும் மந்திரிசபை அமைக்கிறார்கள்!

காங்கிரஸ் ஆட்சி கூடாது என்று கூறிய மக்கள் மன்றத்தை அவமானம் செய்யும் தோரணையில் மந்திரிசபை அமைக்கிறார்கள்!

தாங்கள் செய்யும் காரியம், ஜனநாயகத்திற்கு மாறானது. எதேச்சாதிகாரம் நிரம்பியது. பாசிசப் படுகுழிக்குத் தங்களை இழுத்துச் சென்றிடுவது என்பதை நன்ருக அறிந்திருந்தும் மந்திரிசபை அமைக்கிறார்கள்!

மக்களால் விரும்பப் படாத மந்திரிசபை அமைகிறது!

அந்த மந்திரிசபைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஆச்சாரியார் பிரதமர் ஆகிறார்!

பாசிசம், இதைவிட வேறு எந்தப் பயங்கரமான வடிவத்தில் நடமாட முடியும்!

எதேச்சாதிகாரம், இந்த முறையைவிட வேறு எந்த முறையிலே, இந்த நாட்டில் பவனிவர முடியும்!

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஆச்சாரியார் வருகிறார் பிரதமராக!

மக்களால் விரும்பப்படாத காங்கிரஸ் மந்திரிசபையை உருவாக்க வருகிறார் அவசர அவசரமாக!

தகுமா?

நீதியா?

முறையா?

அடுக்குமா இந்தப் போக்கு?

மக்களால் விரும்பப்படாத ஒரு கட்சி, பொதுத் தேர்தலில் படு தோல்வி அடைந்து குப்புறக் கவிழ்ந்துபோன ஒரு கட்சி, இக்கெட்டிலும் இழிவும் பழியும் தேடிக் கொண்டுவிட்ட ஒரு கட்சி, ஆட்சிப் பீடத்தில் அமர்வது ஜனநாயகமா?

மக்கள் என்ன ஏமாளிகளா இந்த அக்கிரமத்தை, அநீதியை, அட்டூழியத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க?

காங்கிரஸ் ஆட்சி அமையவே கூடாது என்று மக்கள் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள் தேர்தல் மூலம், இவர்களோ, அப்படித் தெரிவித்துள்ள மக்களுக்கு நேர் முகமாகச் சவால் விடுப்பதுபோல மந்திரிசபை அமைக்கிறார்கள்,

மக்கள் மனக் கருத்துக்கு—தீர்ப்புக்கு—தேர்தல் முடிவுக்கு நேர் மாறாக நடக்கிறார்கள்.

இது மிகவும் அபாயகரமான போக்கு.

வேண்டாம் இந்தப் போக்கு—தயவு செய்து வேண்டாம்—நாட்டின் அமைதியைக் கெடுக்கவேண்டாம்—தேர்தல் முடிவுகளை உதாசீனம் செய்யவேண்டாம் ஆச்சாரியாரே—காங்கிரஸ் தலைவர்களே—சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்களே—வேண்டாம் இந்தப் போக்கு என்று நாடு தெளிவாகக் கூறுகிறது.

என்றாலும் ஆச்சாரியார் முன் வந்துவிட்டார் மைனரிட்டி காங்கிரஸை வைத்துக் கொண்டு மந்திரி சபை அமைக்க.

ஆச்சாரியாருக்குத் தைரியம் அபாரமாக இருக்கிறது என்பதை இது விளக்குகிறது என்பது உண்மைதான்.

ஆனால் அந்தத் தைரியம், தேவையில்லாத தைரியம்! ஜனநாயகத்திற்கு மாறான தைரியம்!

எமது அரிய வெளியீடு!

பதவிப் பித்து பிடித்த ஒரு ஆரிய குருவின் பயங்கர வெறியாட்டத்தை சித்தரிப்பது இக் கற்பனைக் கதை. தமிழகத்தைத் தாழச் செய்த தருக்கர்களின் உண்மை உருவம் அப்படியே படம் பிடிக்கப்பட்டிருக்கிறது.

பதவிப்பேய்

குறளன் தீட்டியது

விலை : ரூ. 1—0—0

25% கமிஷன் — தபால் செலவு இனும்!

தனிப் பிரதி வேண்டுவோர் 1—2—0 M. O. செய்யவும்.

வெளி வருகிறது!

ஆண்டவனைப்பற்றி அறிஞர்கள்

60-க்கு மேற்பட்ட உலகப் பேரறிஞர்களின் அரிய கருத்துக்கள் கொண்டது.

விவரங்கட்கு:—

இன்பப் பண்ணை

14, மங்கம்மாள் தெரு, எழுகிணறு, சென்னை-1.

சிறந்த சிந்தனைக் கருவூலங்கள்

இராதாமணாளன்

மனப்புயல்	2	0
மூடுபனி	1	0
பாலைவனம்	0	10
இன்பக் கனவு	0	8
பேசும் பிணம்	0	8
துளிதேன்	0	8
மயானத்தில் முத்தம்	0	8
சந்தலீலா	0	8

பகுத்தறிவுப் பாசறை

131, பிராட்வே, சென்னை.

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers, 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilanchelian B.A. (Hons.)